04 APR 2000

பக்கங்கள் எட்டு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 21 திங்கட்கிழமை (03-04-2000) VALAMPURI ஒலி: 106

# பளைப்பகுதியில் மோதல் வெடித்தது

# மக்கள் பெருமளவில் வெளியேற்றம்

## கிளாலி மாதா ஆலயத்தில் 1200பேர் தஞ்சம்

(எமது விசேட நிருபர்)

பளைப்பகுதியில் விடுதலைப்புலிகளுக்கு அரசபடையினருக்கும் ஏற்பட்ட திடீர் மோதலை அடுத்து அங்கு சிக்கியிருந்த பொதுமக்களின் ஒருபகுதியினர் நேற்று அப்பகுதியிலிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு சென்றனர் இதேவேளை குறிப்பிட்ட நேரத்திற்குப் பின் மக்களை முழுமையாக வெளியேற அனுமதிக்கவில்லை எனவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன இதனால் கிளாலி புனித அந்தோனியார் ஆலயத்திலும் அதனை அண்டியுள்ள வீடுகளிலும் சுமார் ஆயிரத்து இருநூறு பேர் தஞ்சமடைந்துள்ளனர்.

பளைப் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் அரசுப் படைகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள மோதலை அடுத்து மோதல் நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ள மக்களை உயிரிழப்புகளைத் தவிர்க்க கும்முகமாக வெளியேறுமாறு விடுதலைப் புலிகள் தமது வானொலி மூலம் அறிவித்திருந்தனர்.

பிரதான வீதியான கண்டி வீதி போக்குவரத்திற்கு தடைப்பட்டிருப்பதனால் மக்கள் புலோப்பளை அல்லிப்பளை, கிளாலி ஊடாக வெளியேறி வருகின்றனர்.

இவர்களில் முதற்கட்டமாக இருநூறு பேர்வரை வெளியேறிவந்து மிருசுவிலில் சென் நீக்கிலஸ் தேவாலயம் மிருசுவில் மாதா தேவாலயம் உசன் பாடசாலை ஆகியவற்றில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்கள் பாதுகாப்பு

[8ஆம் பக்கம் பார்க்க]

## தென்மராட்சி மோதல்களை அடுத்து அபிவிருத்திப் பணிகள் ஸ்தம்பிதம்!

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மற்றும் பளைப்பகுதிகளில் தற்போது நிலவும் யுத்த சூழ்நிலை காரணமாக மக்கள் வெளியேறுவதைத் தொடர்ந்து அரச சார்பற்ற நிறுவனங்களினால் பலகோடி ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டுவரும் புனருத்தாரணப் பணிகள் இடை நிறுத்தப்படக்கூடிய சூழ்நிலை எழுந்துள்ளதாக அரச உயர் அதிகாரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் புனருத்தாரண புனரமைப்பு வேலைகளை மேற்பார்வை செய்யும் அரச சார்பற்ற நிறு

(8 ஆம் பக்கம் பார்க்க)

### இடம்பெயர்வுக்கான

## கால அவகாசத்தை நீடிக்குமாறு மனிதநேய அமைப்புகள் கோரிக்கை

[புலோலி]

யுத்தம் நடைபெற்றுவரும் பளை மற்றும் பளை கொடிகாமம் வீதி (கண்டிவீதி) பகுதிகளில் உள்ள மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயருமாறு விடுதலைப் புலிகளினால் விடுக்கப்பட்ட அறிவித்தலைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் வெளியேறி வருவதாக செய்திகள் தெரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சூட்டுக்கு ஒருவர் பலி

[யாழ்ப்பாணம்]

புலோப்பளைப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இவரது சடலம் யாழ்.போதனா வைத்திய சலையில் வைக்கப்பட்டுள்ளது.

புலோப்பளையைச் சேர்ந்த சுவக்கீன் (வயது65) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

## முகமாலையில் ஷெல் வீச்சு தேவாலயம் சேதமடைந்தது

[யாழ்ப்பாணம்]

முகமாலையிலுள்ள அன்னை வேளாங்கண்ணி மாதா ஆலயவளவில் விழுந்த ஷெல்லினால் ஆலயச் சுவர் சிறிது சேதமடைந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாலயத்தில் 200க்கும் மேற்பட்டோர்வரை தங்கியிருந்ததாகவும் சில தினங்

[8ஆம் பக்கம் பார்க்க]

## இடம்பெயர்ந்தோருக்கு ஆயிரம் முதல் எண்ணாயிரம் ரூபா வரை உதவி

(புலோலி)

யாழ்ப்பாணத்தில் தற்போதைய யுத்தசூழ்நிலையால் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கைக்கேற்ப ஆயிரம் ரூபா முதல் எண்ணாயிரம் ரூபா வரையான பெறுமதியுள்ள பொருட்களை வழங்க அரசாங்கம் உறுதியளித்துள்ளதாக யாழ்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பில் சிங்கள பேரினவாதிகள்

## நோர்வே அரசின் தலையீட்டை கண்டித்து 6ஆம்திகதி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வுவிடயத்தில் நோர்வே அரசின் தலையீட்டைக் கண்டித்தும் ஐக்கியதேசியக்கட்சியும் அரசாங்கமும் அரசியல்அமைப்பு சீர்திருத்தம் தொடர்பான பேச்சுகளில் ஈடுபட்டு வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் எதிர்வரும் 6ம் திகதிவியாழக்கிழமை கொழும்பில் மகாநாயக்கர்கள் கூடி ஆர்ப்பாட்டம் செய்யவுள்ளனர்

சிங்கள இனவாத அமைப்புக்கள் மகாநாயக்க தேரர்கள் தலைமையில் இவ்வார்ப்பாட்ட எதிர்ப்பினைத் தெரிவிக்கவுள்ளனர்.

(8ஆம் பக்கம் பார்க்க)

### ★ அன்ரனோவ் '26'

## விமான விபத்துக் குறித்து விசாரணை நடத்த உக்ரையின் நிபுணர் குழு வருகை

(கொழும்பு)

அனுராதபுரம் தலாவபகுதியில் ஏற்பட்ட விமான விபத்துத் தொடர்பாகவிசாரணை நடத்த உக்ரையின் நாட்டு நிபுணர் குழு இன்று கொழும்பு வரவுள்ளது

விமானத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற கறுப்புப்பெட்டியிலுள்ள தகவல் தொடர்பாக விமானப்படை அதிகாரிகள் ஆராய்ந்து வருவதாக விமானப்படையைச் சேர்ந்த கொமாண்டோ டபிள்யூ எம்,

(8. ஆம் பக்கம் பார்க்க)

### இயக்கச்சிப்பகுதியில் மோதல்

## 17 படையினர் உயிரிழப்பு 2அதிகாரிஉட்பட 28 படையினர் காயம்

[கொழும்பு]

இயக்கச்சிப்பகுதியில் நேற்று முன்தினம் இராணுவ முன்னணி நிலைகளை ஊடுருவ முயன்ற விடுதலைப்புலிகளுடன் ஏற்பட்டமோதல்களில் 17 படையினர் உயிரிழந்ததாக பாதுகாப்புநடவடிக்கை தலைமைச்செயலகம் அறிவித்துள்ளது,

இரு அதிகாரிகளும் 26படை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு நகரில் ஒருவர் சுட்டுக்கொலை

(கல்முனை)

மட்டக்களப்பு நகரில் தாண்டவன்வெளி என்னுமிடத்தில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நாவலடியைச் சேர்ந்த அழகராஜா சிறிகரன் (வயது 27) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இதேவேளை கொம்மாந்

(3ஆம் பக்கம் பார்க்க)

### ✶ தமிழ் - சிங்கள புதுவருடப்பிறப்பன்று

## 11 கைதிகளும் உறவினர்களும் சாகும்வரை உண்ணாவிரதமிருப்பர்

[கொழும்பு]

வன்னியில் தமிழீழ விடுதலைப் புலிகள் வசமுள்ள பதினொரு யுத்தக் கைதிகளையும் தமிழ் சிங்கள புத்தாண்டு தினமான 13ஆம் திகதிக்கு முன் விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் புத்தாண்டு தினத்தில் இந்து யுத்தக் கைதிகள் வன்னியிலும், அவர்களது உறவினர்கள் கொழும்பிலும் சாகும்வரையிலான உண்ணாவிரதத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

யுத்தத்தின்போது காணாமல் போன படையினரின்

(8 ஆம் பக்கம்பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## (இராசி பலன்)

03.04 2000
திங்கட்கிழமை
(தமிழுக்கு பங்குனி - 21)

சதுர்த்தி இரவு 1.25 வரை பூரட்டாதி 3.53 வரை, மரணயோகம், இராகுகாலம் காலை 8.11 முதல் 9.42 வரை, சுபநேரம் பகல் 12.38 முதல் 3.08 வரை.

**மேடம்:**
மனப்பதட்டம், அவசிய மற்றதலையீடு, பணிவு.

**இடபம்:**
இனியசம்பாஷணை, கருத் தொருமித்தல், பணவரவு.

**மிதுனம்:**
குடும்பக்குதூகலம், சயன சுகம்' நண்பர் வரவு.

**கடகம்:**
சுற்றத்தார்கவலை, நெஞ் சக்குமுறல், சோம்பல்.

**சிங்கம்:**
எதிரிபலம், கெடுபிடி, குழப்பமடைதல்.

**கன்னி:**
சமயச்சர்ச்சை, வாதத் திறமை, அறிஞர்பாராட்டு.

**துலாம்:**
சுபகாரியமுயற்சி, நற் பெயர், சகோதரஉதவி.

**விருச்சிகம்:**
கடமைதவறல், கோப வார்த்தை, வெறுப்பு.

**தனுசு:**
தாழ்ந்தநிலை, மனைவி சினம், பணமுடக்கம்.

**மகரம்:**
சபலபுத்தி, விருந்தினர் சகாயம், பெருமைபேசல்.

**கும்பம்:**
மறுதலித்தல், ஆபாச சூழ்நிலை, நெச்சக்குமுறல்

**மீனம்:**
தாய்வழிநினைவு இனிய விருந்து, மாமியார்கருணை.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

அனுஷியா

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு இம்மாதம் 02 ஆம் திகதிவரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவுஇலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றது.

**சங்கானை**

| | |
|---|---|
| 135538 ஏ | 135587 ஏ |
| 135587 பி | 135587 சி |
| 135713 ஏ | 135783 ஏ |
| 135900 ஏ | 135918 ஏ |
| 135919 ஏ | 135919 பி |
| 135919 சி | 138175 ஏ |
| 138175 பி | 138197 ஏ |
| 138197 பி | 138197 சி |
| 138197 டி | 138198 ஏ |
| 138243 ஏ | 138243 பி |
| 138366 ஏ | 138366 பி |
| 138472 ஏ | 138516 ஏ |
| 139587 ஏ | 139646 ஏ |
| 139646 பி | 139720 ஏ |
| 139732 ஏ | 139747 ஏ |
| 139747 பி | 139747 சி |
| 139788 ஏ | 139788 பி |
| 139788 சி | 139789 ஏ |
| 139789 பி | 141326 ஏ |
| 141340 ஏ | 141340 பி |
| 141397 ஏ | |

**கோப்பாய்**

| | |
|---|---|
| 123921 ஏ | 124135 ஏ |
| 124135 பி | 128089 ஏ |
| 133924 ஏ | 133924 பி |
| 133924 சி | 133924 டி |
| 133924 ஈ | 133924 எவ் |
| 134015 ஏ | 134015 பி |
| 134072 ஏ | 134085 ஏ |
| 134091 ஏ | 134111 ஏ |
| 134111 பி | 134153 ஏ |
| 134167 ஏ | 134183 ஏ |
| 134187 ஏ | 134187 பி |
| 134190 ஏ | 136217 ஏ |
| 136226 ஏ | 136237 ஏ |
| 136237 பி | 136240 ஏ |
| 136241 ஏ | 136241 பி |
| 136266 ஏ | 136266 பி |
| 136273 ஏ | 136287 ஏ |
| 136289 ஏ | 136290 ஏ |
| 136293 ஏ | 136296 ஏ |
| 136296 பி | 136410 ஏ |
| 136410 பி | 136429 ஏ |
| 136452 ஏ | 136465 ஏ |
| 136466 ஏ | 136468 ஏ |
| 136468 பி | 136472 ஏ |
| 136472 பி | 136512 ஏ |
| 136512 பி | 136527 ஏ |
| 136529 ஏ | 136529 பி |
| 136542 ஏ | 136542 பி |
| 136624 ஏ | 136625 ஏ |
| 136628 ஏ | 136628 பி |
| 136632 ஏ | 136634 ஏ |
| 136634 பி | 136634 சி |
| 136634 டி | 136635 ஏ |
| 136721 ஏ | 136767 ஏ |
| 136790 ஏ | 136790 பி |
| 136796 ஏ | 136796 பி |
| 139434 ஏ | 139437 ஏ |
| 139448 ஏ | 139448 பி |
| 139449 ஏ | 139449 பி |
| | 139453 ஏ |
| 139453 பி | 139455 ஏ |
| 139854 ஏ | 139891 ஏ |
| 139892 ஏ | 139894 ஏ |
| 139894 பி | |

**நல்லூர்**

| | |
|---|---|
| 128326 ஏ | 128326 பி |
| 128350 ஏ | 128350 பி |
| 136112 ஏ | 136152 ஏ |
| 136153 ஏ | 136166 ஏ |
| 136741 ஏ | 136852 ஏ |
| 136854 ஏ | 126854 பி |
| 136855 ஏ | 136855 பி |
| 139457 ஏ | 139877 ஏ |
| 139928 ஏ | 139928 பி |
| 141008 ஏ | 141009 ஏ |
| 129027 ஏ | 130557 ஏ |
| 131780 ஏ | 131813 ஏ |
| 135490 ஏ | 135530 ஏ |
| 135793 ஏ | 135793 பி |
| 135979 ஏ | 138441 ஏ |
| 138441 பி | 139570 ஏ |
| 139570 பி | 141289 ஏ |

**சண்டிலிப்பாய்**

| | |
|---|---|
| 128909 ஏ | 128909 பி |
| 130818 ஏ | 130818 பி |
| 131843 ஏ | 131843 பி |
| 131843 சி | 131843 டி |
| 135599 ஏ | 135599 பி |
| 135631 ஏ | 135631 பி |
| 135631 சி | 135661 ஏ |
| 135661 பி | 135801 ஏ |
| 135801 பி | 135802 ஏ |
| 135802 பி | 135867 ஏ |
| 138106 ஏ | 138106 பி |
| 138123 ஏ | 138123 பி |
| 138139 ஏ | 138144 ஏ |
| 138164 ஏ | 138195 ஏ |
| 138196 ஏ | 138200 ஏ |
| 138223 ஏ | 138257 ஏ |
| 138273 ஏ | 138303 ஏ |
| 138333 ஏ | 138519 ஏ |
| 138519 பி | 138543 ஏ |
| 138548 ஏ | 138566 ஏ |
| 139562 ஏ | 139562 பி |
| 139686 ஏ | 139809 ஏ |
| 141403 ஏ | 141403 பி |
| 141403 சி | 141403 டி |
| 141403 ஈ | 141403 எப் |

**தெல்லிப்பழை**

| | |
|---|---|
| 131735 ஏ | 131735 பி |
| 131762 ஏ | 131762 பி |
| 135542 ஏ | 138346 ஏ |
| 138346 பி | 139617 ஏ |
| 139617 பி | |

**உடுவில்**

| | |
|---|---|
| 123817 ஏ | 123817 பி |
| 134127 ஏ | 134127 பி |
| 134223 ஏ | 134223 பி |
| 136320 ஏ | 136324 ஏ |
| 136324 பி | 136329 ஏ |
| 136329 பி | 136329 சி |
| 136373 ஏ | 136373 பி |
| 136378 ஏ | 136396 ஏ |
| 136565 ஏ | 136565 பி |
| 136699 ஏ | 136699 பி |
| 136781 ஏ | 136781 பி |
| 129063 ஏ | 129063 பி |
| 129253 ஏ | 134826 ஏ |
| 135510 ஏ | 135579 ஏ |
| 135579 பி | 135579 சி |
| 135744 ஏ | 135744 பி |
| 135744 சி | 135929 ஏ |
| 135929 பி | 135952 ஏ |
| 135952 பி | 138095 ஏ |
| 138095 பி | 138095 சி |
| 138095 டி | 138100 ஏ |
| 138207 ஏ | 138230 ஏ |
| 138266 ஏ | 138266 பி |
| 138363 ஏ | 139724 ஏ |
| 141194 ஏ | 141194 பி |


## பதவி வெற்றிடம்

**கணனியில் ரைப் செற்றிங்**
(TYPE SETTING)

செய்யக் கூடிய தமிழ் ஆங்கில தட்டச்சு வேலைகளில் நன்கு தேர்ச்சி பெற்ற பெண் ஒருவர் தேவை. திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும் மாநகர சபை எல்லைக்குள் இருப்பவர் விரும்பத் தக்கது.

**சாந்தி அச்சகம்**
நாச்சிமார் கோயிலடி,
தொலைபேசி: 2821 யாழ்ப்பாணம்.
(கி/162)


## அறிவித்தல்

### குமண கப்பலில் பொருட்களை ஏற்றுவதற்கு விண்ணப்பித்தோர் கவனத்திற்கு

காங்கேசன்துறை, பருத்தித்துறை துறைமுகத்தில் பொருட்களை இறக்கிக் கொண்டிருக்கும் குமண கப்பலில் 05-04-2000 தொடக்கம் பொருட்களை ஏற்றக்கூடியதாக இருப்பதனால் பொருட்களை ஏற்றுவதற்கு விண்ணப்பித்தவர்கள் 03-04-2000 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்குத் தவறாது யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதிக்குச் சமூகம் அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.
(கி/163)

## பங்குனித் திங்கள் உற்சவம்

(அரியாலை)

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்பாள் ஆலய பங்குனித் திங்கள் உற்சவத்தை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி மாலை 5.00 மணிக்கு விசேடபூஜை ஐயடுத்து தொடர்ந்து அம்பாள் உள்வீதி வலம் வரும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

(செ-106)

மதுபோதையில்

## பாடசாலை செல்லும் ஆசிரியரால் விரக்தியின்விளிம்பில் மாணவர்கள்

(ஊர்காவற்றுறை)

மதுபோதையில் வரும் ஆசிரியர்களால் தாம் அனுபவித்துவரும் துன்பங்கள் குறித்து ஊர்காவற்றுறை கரம்பன் பகுதிப் பாடசாலை மாணவர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

மேற்படி பாடசாலையில் கல்விப்பணி புரியவென தனிப்பட்ட முறையில் அதிபரினால் நியமிக்கப்பட்ட ஆசிரியர் இருவரினது செயற்பாடுகள் திருப்திகரமானதாக இல்லை. இது விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட வட்டாரங்களுக்கு எடுத்துக் கூறியும் நடவடிக்கையேதும் மேற்கொள்ளப்பட வில்லை.

அண்மையில் மதுபோதையில் வந்த ஆசிரியர்கள் மாணவர்களுடன் மிகவும் கடுமையான முறையில் நடந்து கொண்டனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட மாணவர்கள் பாடசாலையின் அதிபரிடம் முறையிட்டனர். இதற்கு அதிபர் மட்டத்தில் இருந்து எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மாறாக தம்மீது முறைப்பாடு செய்த மாணவர்களை ஆசிரியர்கள் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இவ்வாறான தான்தோன்றித்தனமான ஆசிரியர் நடவடிக்கையானது முழு ஆசிரியர் சமூகத்திற்குமே களங்கம் கற்பிக்கும் செயலென கல்விச் சமூகத்தினரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(உ-75)

## அரச படைகளை நெறிப்படுத்த இரண்டு உயரதிகாரிகள் ஜனாதிபதியால் நியமனம்

வடக்கில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சண்டை உக்கிரமடைந்து வருவதனையடுத்து அரச படைகளை நெறிப்படுத்த கூட்டுப் படைத் தலைமையகத்தின் யாழ். பிராந்திய இணைப்பதிகாரியாக மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவும் அட்மிரல் எச்.ஆர். அமரவீரவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புலிகளின் தாக்குதலை முறியடிப்பதற்கான திட்டங்களை வகுத்து அரச படைகளை நெறிப்படுத்துவதற்காக ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் பிரஸ்தாப இரு அதிகாரிகளும் யாழ். பிராந்தியத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சின்உயரதிகாரிஒருவர் தெரிவித்தார். (சி)

## இரத்த ஆறு ஓடுவதை புத்தபிரான் வழிவந்தவர்களே விரும்புவதா?

### செல்வராஜா எம்.பி சாடுகிறார்

[மண்டூர்]

''புத்தர் என்ற மகானின் வழி வந்தவர்களே இன்று நாட்டில் இரத்த ஆறு ஓடுவதை விரும்புகின்றனர்.''

என்று திரு. பொ. செல்வராஜா எம். பி. மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பேசுகையில் கூறினார்.

''மக்களை நல்வழிப்படுத்தும் சமயவாதிகள் நாட்டின் சமாதான முயற்சிகளை எதிர்க்கும் நிலையில் உள்ளனர். புத்தபெருமான் 3 தடவைகள் இலங்கைக்கு வருகை புரிந்துள்ளார். நாட்டின் சமாதான சுகவாழ்வு வேண்டியே அவர் இங்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

சமய வாதிகளுக்கு அரசும் அஞ்சுகிறது. எனவே இனப் பிரச்சினையை அரசு எப்படித் தீர்க்கப் போகிறது. என்பது தெரியவில்லை என்றும் அவர் தனது உரையில் கூறினார்.

(சி)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

## பொது ஆங்கிலமொழி, கற்பித்தல் (GELT)

1999/2000

1999/2000 கல்வி ஆண்டில் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில் வசிக்கும் மாணவர்கள் தமது வதிவிடத்திற்கு அருகிலுள்ள பின்வரும் 'ஜெல்ற்' நிலையங்களில் தாமாகவே பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்,

| நகரங்கள் | பாடசாலைகள் |
|---|---|
| யாழ்ப்பாணம் | யா/மத்திய கல்லூரி |
| | யா/இந்து மகளிர் கல்லூரி |
| மானிப்பாய் | யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி |
| பருத்தித்துறை | யா/வட இந்து மகளிர் கல்லூரி |
| சாவகச்சேரி | யா/டிறிபேக் கல்லூரி |

மாணவர்கள் மேற்குறித்த நிலையங்களில் ஏப்ரல் 10ம் திகதி தொடக்கம் 17ம் திகதி வரை பதிவு செய்து கொள்ளலாம். தரம் காணும் தேர்வு 29ம் திகதி நடைபெறும். தமது வதிவிடத்திற்கு அருகில் உள்ள நிலையத்தில் தேர்வுக்குத் தோற்றுமாறு மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது.

பதிவாளர்.
(கி/160)

யாழ்ப்பாணம்

## வினை சாராது நீயருளே

முப்புரங்கள் எரிசெய்யும் முனைப்பி னோடு
முறுக்கிவெஞ் சிலையெடுத்துச் செந்தீ மூட்ட
அப்பரமர் ஏறுரத அச்சொ டித்தே
அகிலமதுக் குன்பெருமை அறிய வைத்தாய்
இப்பரததில் நல்லைநாயன் மார்கட் டூரில்
எழுந்தருளி யருளர சடியின் நாதா
சப்பரத்தில் ஏறிவரும் சர்வேஸ் வரனே
சார்ந்திடுவார் தம்மைவினை சாராது நீயருளே

நாயன்மார்கட்டு இராசையா குகதாசன்.

யாழ் நல்லூர் நாயன்மார்கட்டுஸ்ரீ அரசடி விநாயகர் தேவஸ்தான சப்பரத் திருவிழாவை ஒட்டி 03-04-2000 இக்கவிதை பிரசுரமாகின்றது.

## தமிழ்ப் பயணியிடம் கொள்ளை பொலிஸ்காரர் கைதானார்

திருமலை-பொலநறுவை தபால்ரயிலில் பயணம்செய்த வெள்ளவத்தை தமிழர் ஒருவரிடம் தனது பொலிஸ் அடையாளஅட்டையைக் காட்டி 50 ஆயிரம் ரூபாவைப் பறித்த பொலிஸ்காரர் ஒருவர் மாறுவேடத்திலிருந்த ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

இவர் தலைமையில் ஒரு கோஷ்டி குறிப்பிட்ட ரயிலில் பயணம்செய்யும் தமிழர்களிடம் கொள்ளையடிப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தது என்றும் பிரஸ்தாப தமிழ்ப்பயணியின் பணம் மீட்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (சி)

### மட்டக்களப்பில் தொடரும்

# உண்ணாவிரதப் போராட்டம்

# ஆசிரியர் மயங்கி வீழ்ந்தார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் உண்ணா விரதப் போராட்டம் 6 ஆவது நாளை கடந்து விட்டதாகவும் இரவு பகலாக இப் போராட்டம் தொடர்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்போராட்டத்தில் தீவிரமாக பங்கேற்று வரும் ஆசிரியர் ஒருவர் மயக்கமுற்றதையடுத்து மட்டக்களப்பு போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இப்போராட்டத்திற்கு அரச படையினர், ஈ.பி.டி.பி அமைப்பினர், ஈ.பி.ஆர்.எல்.எவ். குழுவினர் ஆதரவு வழங்குகின்றனர்.

இதேவேளையில் இவ் உண்ணா விரதப் போராட்டம் சம்பந்தமான அரச தரப்பு எதுவித கவனம் செலுத்தியதாகத் தகவல் இல்லை.

எனினும் பொதுத்தேர்தலுக்கு நாட்கள் எண்ணப்படுகின்ற இவ்வேளையில் இவ்விடயத்தை அரசாங்கம் நிதானமாகவே கையாளும் என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடக்கு-கிழக்கு தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் பட்சத்தில் தென்பகுதியில் கடமை புரியும் சுமார் 10 ஆயிரம்பெரும்பான்மையினத் தொண்டர் ஆசிரியர்களும் தமக்கும் நிரந்தர நியமனம் வழங்குமாறு கோருவர் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடக்கு - கிழக்கின் ஏனைய பகுதிகளிலும் தொண்டர் ஆசிரியர் போராட்டம் முனைப்பு பெற்று வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-60)

## அரச அதிபருடனான சந்திப்பு இணக்கம்ஏற்படாவிடின் உற்பத்தி நிறுத்தம்

### பேக்கரி உரிமையாளர் சங்கம் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

மக்களின் உடனடி உணவுத் தேவையை பூர்த்தி செய்யும் பாணின் புதிய விலை நிர்ணயம் தொடர்பாக நேற்றுக்காலை பிரதான வீதியில் அமைந்துள்ள பேக்கரி உரிமையாளர் சங்கக் காரியாலத்தில் நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில், யாழ். செயலகம் நிர்ணயித்துள்ள பாணுக்கான புதிய விலைக்குத்தாம் இணங்க முடியாதென சங்க உறுப்பினர் ஏகமனதாக முடிவு செய்துள்ளனர்.

நேற்றைய கூட்டத்தில் சங்க உறுப்பினர்கள் இவ் விலை நிர்ணயம் தொடர்பாக தத்தமது கருத்துக்களை தெரிவித்த போதிலும் தற்சமயம் கொழும்பில் தங்கியிருக்கும் அரச அதிபர் யாழ். வந்தவுடன் தமது நிலைப்பாடு குறித்து அரச அதிபருடன் ஆராயப்படவுளதாகவும் தமது கோரிக்கைக்குச் சாதகமான தீர்வு கிடைக்காத பட்சத்தில்.

தமது முடிவை அரச அதிபருக்குத் தெரிவித்துவிட்டு எதிர்வரும் பதினைந்தாம் திகதி முதல் பாண் உற்பத்தியை நிறுத்தவுள்ளதாகச் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இப்புதிய விலைக்குப் பாணை விற்கமுற்பட்டால் நாம்நஷ்டத்தை தான் எதிர் நோக்க வேண்டி வரும்எனவும் அதிலும் பார்க்க தாம் தெரிவு செய்யாமல் விட்டு விடலாம் எனவும் சங்க உறுப்பினர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# வாழைக்குலை கொள்வனவில்

# ஆர்வம் செலுத்தும் வர்த்தகர்கள்

### விலை கூடாதது விவசாயிகள் கவலை

(கோப்பாய்)

பழுதடையும் பொருள்களுக்கான கப்பல் கட்டணநீக்கத்தைத் தொடர்ந்து வாழைக்குலைகளை கொள்வனவு செய்வதில் வர்த்தகர்கள் பெரும் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

எனினும் வாழைக்குலைகளின் விலைகள் உயர்வடையாதது குறித்து விவசாயிகள் பெரிதும் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஒரு கிலோ வாழைப்பழம் ஒரு ரூபா முதல் 2.50 ரூபா வரை விற்கப்பட்டு வருவதும் சந்தைகளுக்கு வாழைக்குலைகளை கொண்டு செல்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டாமல் இருந்து வருவதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

வாழைக்குலைகளை கொழும்பிற்கு அனுப்பும் முயற்சிகள் எதிர் பார்த்தது போல பெருமளவு வெற்றியளிக்கவில்லை என்றும் விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

(க-79)

### யாழ்ப்பாண மாவட்டத்தில்

## மதுவரித் திணைக்களத்தின் சேவைகள் மந்தகதியிலாம்

### ஆணையாளர் பொருமுகின்றார்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் மதுவரித் திணைக்களத்தின் நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கு மதுவரி ஆளணியினர் பற்றாக் குறையாக இருப்பதாக உதவி மதுவரி ஆணையாளர் வீ.என். ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில் மதுவரித் திணைக்களம் கடந்த நான்கு ஆண்டு காலத்தில் ஆற்றிய பணிகளை விட 2000-ம் ஆண்டில் முதல் மூன்று மாதங்களிலும் மிகக் கூடுதலான பணிகளைச் செய்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

குறிப்பாக மாவட்ட மட்ட சட்டவிரோத மதுபான விற்பனை, கசிப்பு உற்பத்தி விற்பனை போன்ற குற்றச்செயல்களைக் கணிசமானளவு கட்டுப் படுத்தக்கூடியதாக இருந்ததாகவும் அறியப்படுகிறது.

மேலும் மதுவரித்திணைக்களத்தின் பணிகளை நிறைவேற்ற வாகன வசதிகள் இல்லாமை பெரும் பின்னடைவு எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சாவகச்சேரி, சங்கானை, யாழ்ப்பாணம், மல்லாகம், பருத்தித்துறை ஆகிய ஐந்து இடங்களில் மதுவரி நிலையங்கள் தற்போது இயங்கி வருகின்றது' (க-77)

## களுத்துறைசிறையில் இருந்து ஒன்பது தமிழ்க்கைதிகளைமட்டு.சிறைக்குமாற்றம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தைசேர்ந்த 9தமிழ் அரசியல் கைதிகள் களுத்துறை சிறையிலிருந்து மட்டக்களப்பு சிறைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் மட்டக்களப்பு உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ததைத் தொடர்ந்து களுத்துறை சிறையிலிருந்து இராணுவப்பாதுகாப்புடன் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு சிறையில் தற்போது விடுதலைப்புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் 24 தமிழ் சந்தேக நபர்கள் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(வ-7)

### மட்டக்களப்பு...

துறை இராணுவப் புலனாய்வுப்பிரிவைச் சேர்ந்த ஒருவர் பிஸ்ரல் குழுவினரின் தாக்குதலில் காயமடைந்துள்ளார்.

பரமானந்தம் ரவிக்குமார் (வயது 25)என்பவரே காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச

## எந்திரவியல் டிப்ளோமா பதிவு நீடிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் திறந்த பல்கலைக் கழகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள எந்திரவியல்டிப்ளோமாகற்கை நெறிக்கான பதிவுகளை நாளை செவ்வாய்க் கிழமை வரை மேற்கொள்ள முடியும் என யாழ். திறந்த பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஏற்கனவே வழங்கப்பட்ட வவுச்சர்கள் மூலம் எந்தவொரு மக்கள் வங்கிக் கிளைகளிலும் பதிவுக்கான கட்டணத்தை நாளைவரை செலுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ந]

## துடுப்பாட்ட போட்டி முடிவு

(திருநெல்வேலி)

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தின் வெற்றிக் கிண்ண துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து விளையாடிய உடற் கல்வி அணி, 9 விக்கட் இழப்பிற்கு 185 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

2-வது ஆட்டத்தின் போது அரியாலை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளையாடிய கொக்குவில் மத்திய நிலைய (பி) அணி 4 விக்கட் இழப்பிற்கு 164 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

(செ-22)

### சமூகத்தின்

# வழிகாட்டிகள் பட்டதாரிகளே அவர்கள்சமூகத்தின்சுமைகள்அல்ல

### யாழ். பல்கலை துணைவேந்தர் தெரிவிப்பு

''பட்டதாரிகள் சமுதாயத்தின் சொத்தாக இருக்க வேண்டும அவர்களால் மற்றவர்கள் பயனடைய வேண்டுமே தவிர அவர்கள் சமுதாயத்தில் சுமையாக இருக்கக் கூடாது''

நேற்று இலங்கை திறந்த பல்கலைக் கழக் யாழ். இணைப்பு நிலையத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியயாழ். பல்கலை கழக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் பிராந்திய இயக்குநர் ச.ஆ ஞானேந்திரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி பட்டமளிப்பு விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் யாழ் சமூகம் கல்வியில் நிறைவான ஈடுபாட்டைக் கொண்டிருக்கவேண்டும்.

எல்லாத் தரப்பிலிருந்தும் அழுத்தங்களைப் பிரயோகிப்பதன் மூலம் சிலவேலைகளை நாம் செய்யமுடியும்.

இன்றைய சூழலில் சகலரும் உயர்கல்வி பெற்றிருக்க வேண்டுமென தெரிவித்த அவர் ஒரு நாட்டில் உயர் கல்வியும் பிரயோக கல்வியும் இருந்தாலே முழுவளத்தையும் பெறலாம் என தெரிவித்தார்.

யாழ். மாணவர்கள் உயர்தர வகுப்புவரை ஊக்கத்துடன் படித்து விட்டு பின்னர் உயர்கல்வியில் அவர்களது, ஈடுபாடு குறைந்துவருகிறது எனவும் தெரிவித்தார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கலாநிதி சபா ஜெயராசா உரையாற்றுகையில்: ஒருவர் எத்தனை பட்டங்களைப் பெற்றுக் கொள்ள முடியுமோ அந்தனையையும் பெறவேண்டும் அப்போது தான் அவனால் முன்னேற முடியும் எனத் தெரிவித்ததுடன் ஒரு நாட்டின் எழுச்சிக்கு அறிவு தான் அத்தியாவசியமானது.

அறிவுதான் அபிவிருத்தியை அளவிடுகின்ற சுட்டியாக உள்ள தெனவும் தெரிவித்தார்.

கல்வித்துறை சார்ந்த அறிவியலாளர்கள் பலர் இவ் விழாவில் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக இப்பட்டமளிப்பு விழா இடம் பெற்றதும் இங்கு குறிப்பிடத்தக்கது

க-3

## யாழ். சுகாதார திணைக்களத்திற்கு கிடைத்த மோட்டார் சைக்கிள்கள்

(நீராவியடி)

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு கடந்த 31 ஆம் திகதி நான்கு 'ஹீரோ ஹொண்டா' மோட்டார் சைக்கிள்களும், இரண்டு ஜெனரேட்டரும், ஒரு குளிரூட்டியும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மேற்படி பொருட்களை பொறுப்பேற்றுக் கொண்ட சுகாதாரசேவைகள் மாகாண பிரதிப்பணிப்பாளர் செல்வி உமா சிவபாதசுந்தரம இரண்டு மோட்டார்சைக்கிள்கள் முதற் கட்டமாக தெல்லிப்பழை, மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வழங்கப்படும் எனவும் ஜெனரேற்றர்கள் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கும், குளிரூட்டி அளவெட்டி வைத்தியசாலைக்கு வழங்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-78)

## கோழி வளர்ப்பில் அமோக நாட்டம் குஞ்சுகளை பெற முடியாது அவலம்

(மட்டக்களப்பு)

கோழி வளர்ப்புத் தொழிலில் ஈடுபடுவோர் தொகை அதிகரித்து வருகின்றது. இறைச்சி, முட்டை இனக் கோழிகளை வளர்ப்பதில் அதிகமானவர்கள் ஆர்வம் காட்டி வருவதுடன் நிறைந்த வருமானத்தையும் பெற்று வருகின்றனர்.

போதியளவு கோழிக்குஞ்சுகளை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் பெறமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மாதத்திற்கு ஒரு தடவையே குஞ்சுகளைப் பெறமுடியுமென கோழி வளர்ப்பாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வெளியாரிடம் அல்லது தனியார் வர்த்தகர்களிடம் கோழிக்குஞ்சுகளைப் பெற பணத்தைச் செலுத்தி விட்டு பல மாதங்கள் காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். சில சமயங்களில் இவ்வாறு பணம் செலுத்திய பலர் ஏமாற்றப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெருமளவில் கோழி வளர்ப்புத் தொழிலிலீடுபட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (க-60)

## சகோதரர்களுக்கிடையில் சண்டை கொலையில் முடிவடைந்தது

(யாழ்ப்பாணம்)

சகோதரர்களிடையே ஏற்பட்ட வாக்குவாதம் உலக்கையடியை அடுத்து கொலையில் முடிவடைந்த பரிதாபச் சம்பவம் ஊர்காவற்றுறை நாரந்தனைபகுதியில்அண்மையில் இடம்பெற்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது;

ஊர்காவற்றுறை நாரந்தனையைச் சேர்ந்த சுப்பிரமணியம் நவரத்தினராசாவை அதே இடத்தைச் சேர்ந்த அவரது சகோதரர்களான சுப்பிரமணியம் கணேசலிங்கம், சுப்பிரமணியம் தங்கராசா ஆகியோர் உலக்கையால் அடித்துக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கு யாழ். நீதிமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கொலைக் குற்றச்சாட்டு சம்பந்தமாக குற்றம் சாட்டப்பட்ட இருவரையும் ஊர்காவற்றுறை பொலிஸார் யாழ். நீதிமன்ற நீதிவான் இ. த. விக்கினராசா முன்னிலையில் ஆஜர்படுத்தினர்;

சந்தேகநபர்கள் இருவரையும் இம்மாதம் 14ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் பிரேத பரிசோதனையையடுத்து கொலை எனத் தீர்ப்பளித்தார். (க)

### மட்டக்களப்பில்

## குறிஞ்சா முனைவீதியூடாக பொது மக்கள் பயணம் செய்யத்தடை

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் உள்ள அன்னங்குடா, மண்டபத்தடி அரையாட்டம்தீவு போன்ற இடங்களிற்கு வவுணதீவு இராணுவ முகாமை ஊடறுத்துச் செல்லும் குறிஞ்சா முனை வீதியூடாக பொது மக்கள் பயணம் செய்ய பாதுகாப்பு தரப்பினால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தென் இலங்கைப் பகுதியில் இடம்பெறும் தற்போதைய தாக்குதல்களின் எதிரொலியாக பாதுகாப்பு காரணங்களையிட்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

குறிஞ்சா முனை வீதியூடாக 2 கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து செல்லவேண்டிய பிரதேசங்களிற்கு தற்போது பத்தாம் கட்டை வீதி வழியாக சுமார் 8கிலோ மீற்றர் சுற்றுப் பாதையால் செல்ல வேண்டிய அசௌகரிய நிலை ஏற்பட்டுள்ளது. என புகார் தெரிவிக்கப்படுகிறது. (க-108)

## இடம் பெயர்ந்த மக்களுக்கு சமைத்த உணவு வழங்க ஏற்பாடு

வடமராட்சி கிழக்கில் தொடரும் பதற்ற நிலையில் இடம்பெயர்ந்து பருத்தித்துறைப் பகுதியில் தங்கியிருப்போருக்கு சமைத்த உணவு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சென் அன்ரனீஸ் தேவாலயத்தில் 44 குடும்பங்களும் தும்பளை சென். மேரிஸ் தேவாலயத்தில் 90 குடும்பங்களும் மற்றும் உறவினர் வீடுகளில் 34 குடும்பங்களும் தங்கியுள்ள தாகவும் மேலும் தெரிவிக்கப் படுகிறது.

இவர்களுக்கு சமைத்த உணவுகளை வழங்குவதில் மீனவர் கூட்டுறவுச் சங்கம் தனியார் வர்த்தகர்கள் மற்றும் சமூக நலன் விரும்பிகளும் இவ் விடயத்தில் தீவிர ஆர்வம் காட்டிவருவதாகவும் அறியப்படுகிறது. (சி)

# சுகநலன் பற்றிய விழிப்புணர்வே சமாதானத்திற்கான தோற்றுவாய்

### - வைத்தியகலாநிதி நச்சினார் கினியன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மானிட சமூகங்களிடையே இன்று பெரும்பாலும் யுத்தம் வன்முறைகள் என்பன இடம் பெற்றுவருகின்றன. இந்த நிலை மாற்றப்படவேண்டுமெனில் சுகநலன் பற்றிய விழிப்புணர்வு முதன்மையானதாகும். அங்கோலாவில் இவ் விழிப்புணர்வே சமாதானத்திற்கான வழியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவப் பீடசமூக வியற்றுறை தலைவர் வைத்திய கலாநிதி நச்சினார்கினியன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பேராசிரியர் சிவஞானசுந்தரம் தலைமையில் யாழ். பல்கலைக் கழக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்;

சுகநலன் பற்றிய விழிப்புணர்வே சமாதானத்துக்கான சிறந்த வழி.

எமது நாட்டில் கூட யுத்த காலங்களில் போலியோ சொட்டு மருந்து வழங்குவதற்காக அரசும் விடுதலைப் புலிகளும் யுத்த நிறுத்தம் செய்ததை ஓர் முன்மாதிரியாக நாம் எடுத்துக் கொள்ளலாம். மனிதரிடையே மனிதப்பண்பு உயரவேண்டுமெனில் மனித சுதந்திரம் மனித உரிமைகள் மேன்மையாக மதிக்கப்பட வேண்டும். இதில் அரசுகளே முன்மாதிரியாக செயற்பட வேண்டும். ஆனால் இன்று இங்கு சரி அரசுகள் மனித உரிமைகளை பறித்தெடுக்கும் நிலையே காணப்படுகிறது. என்றார். (க-78)

## மகா கும்பாபிஷேகம்

(அரியாலை)

அளவெட்டி தெற்கு அருள்மிகுநடன விநாயகர் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் கடந்த் 23. ஆம் திகதி ஆரம்பமாகி, தொடர்ந்து 12 நாள் அபிஷேகம் நடைபெற்று, இறுதி நாளான இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவுடன் நிறைவு பெறுகின்றது. (செ-106)

## மல்லாகம் பழம்பிள்ளையார் திருப்பணி

(யாழ்ப்பாணம்)

சரித்திர பிரசித்தி பெற்ற மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் திருப்பணி வேலைகள் தற்போது மும்முரமாக நடைபெற்றுவருகின்றன.

மேற்படி கோவில் ஆதீன கர்த்தா சிவஸ்ரீ. மு. நாகேந்திரசர்மா இத்திருப்பணி வேலைகளை முன்னின்று நடத்திவருகிறார். (சி)

## இடம்பெயர்ந்தோர் நிவாரணம் விரைவில்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயந்த நிவாரணம் பெறுபவர்களுக்கான உலர் உணவுப் பொருட்கள் இம்முறை 85 ஏபி புள்ளிகளுக்கு அனுமதிப் பத்திர மூலம் வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கான அனுமதிப் பத்திரம் கிராம சேவையாளர்கள் மூலம் விரைவில் வழங்கப்படவுள்ளது. (க-120)

## விரைவான பணிகள்

(இணுவில்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு 2000 ஆண்டு பிரமாண அடிப்படையிலான நிதியின் கீழ் புதிதாக பக்ஸ் இயந்திரம். போட்டோ பிரதி இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்படவுள்ளது. இதன் மூலம் அலுவலகவேலைகள் மிக விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (49-சி)

## மீன்விலை அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்]

சுன்னாகம் பிரதான சந்தையில் மீனின் விலை கடந்த சிலதினங்களாக மிக உயர்ந்துள்ளது.

வடமராட்சி மற்றும் யாழ். கடலேரிப்பகுதியில் மீன்பிடிப் பதில் ஏற்பட்டுள்ள தடங்கல் நிலையே இதற்குக் காரணமெனக் கூறப்படுகிறது. (சி)

## ஏப்ரல் முட்டாள் தினக் கொண்டாட்டம் இராணுவத் தலையீட்டில் முடிந்தது

### பருத்தித் துறையில் சம்பவம்

(மந்திகை)

ஏப்ரல் முட்டாள் தினக் கொண்டாட்டமானது இளைஞர் குழுவிற்கும் முதிய தலைமுறையினருக்கும் இடையில் கருத்துவேறுபாட்டை ஏற்படுத்தியதுடன் அடிதடியாக மாற இருந்த நிலையில் அவ்வழியால் வந்த இராணுவத்தினரின் தலையீட்டால் பிரச்சினை சுமுகமாக தீர்த்து வைக்கப்பட்டது.

இச்சம்பவம் பருத்தித்துறைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது.

நேற்று முன்தினம் ஏப்ரல் முட்டாள் தினத்தைக்கொண்டாடிய இளைஞர் குழுவினர் எல்லை மீறி யுவதிகள், பெண்கள், மற்றும் பெரியவர்கள் மீதும்மை. ஒயில்முட்டைஎன்பவற்றை வீசினர். இதனால் ஆத்திரம் கொண்ட முதியவர் ஒருவர் இளைஞர் குழுவினருடன்மோதமுற்பட்டார் இச் சமயத்திலேயே இராணுவம் தலையிட வேண்டி ஏற்பட்டது.

இதேவேளையில் கோப்பாய் பகுதியில் யுவதி மீது மை ஊற்றிய இளைஞர் செயலாலல் ஆத்திரம் அடைந்த யுவதி தனதுபெற்றோரிடம் முறையிட்டதையடுத்து சம்பந்தப்பட்டோர் இளைஞர் குழுவை வலை வீசித்தேடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொண்டாட்டங்கள் தமக்குஅவசியம்தான் ஆனால் அதற்காக எல்லை மீறி மற்றவர் மனதைப் புண்படுத்தி அதன் மூலம் இன்பம் காண முற்படும் கொடூர வக்கிரத்தனம் அடியோடு ஒழிக்கப்பட வேண்டுமென பாதிக்கப்பட்டோர் கவலை வெளியிட்டுள்ளனர். (க-23)

### ஊர்காவற்றுறையில்,

## திறமையாகச் செயற்பட்ட ச.ச.நிலையங்களுக்கு ஊக்குவிப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் திறமையாகச் செயற்பட்ட சனசமூக நிலையங்களுக்கு ஊக்குவிப்புப் பணமாக ரூபா 80ஆயிரம் பெறுமதியான பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கையை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாட்ட அமைப்பினரும் ஊர் காவற்றுறை பிரதேச செயலகமும் இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

திறமையாகச் செயற்பட்டமைக்காக நாரந்தனை வடக்கு சனசமூக நிலையம் கரம்பன் சிவகௌரி சனசமூக நிலையம் மருதபுரம் சனசமூக நிலையம் ஆகியவையே இவ்வாறு 80 ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைக்காட்சிப் பெட்டி, மின்பிறப்பாக்கி என்வற்றைப் பெற்றுக்கொள்ளவுள்ளன. (உ-75)

## மரக்காலையில் நிகழும் திருட்டுகள் சுன்னாகம் பகுதியில் தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

மரக்காலை உரிமையாளர் காலைவேளை அருகில் உள்ள இடம்மொன்றில் பூப்பறிக்கச் சென்றிருந்த சமயத்தில் மரக்காலைக்குள் தந்திரமாக நுழைந்ததிருடன் ஒருவன் மேசைலாச்சியை லாவகமாக உடைத்து தோல்பைஒன்றில் வைக்கப்பட்டிருந்த7400ரூபா ரொக்கம், தேசியபாதுகாப்பு அடையாளஅட்டைகள், மற்றும் தஸ்தாவேஜீகளை அபகரித்துச்சென்று விட்டார்.

இத்துணிகரச்சம்பவம் கடந்த புதன்கிழமை சுன்னாகத்தில் கந்தையா நவபாலன் என்பவரது மரக்காலையில் நிகழ்ந்தது.

இதேபோன்ற திருட்டுச்சம்பவம்ஒன்று இவரது மரக்காலைக்கு அடுத்தாகவுள்ள இ. சிவலிங்கம் என்பவரது மரக்காலையிலும் கடந்த சிலதினங்களுக்கு முன்னர் நிகழ்ந்ததும், திருடன் அவரது தேசிய பாதுகாப்பு அட்டைகளைமாத்திரம் தபாலில் அனுப்பிவைத்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தொடர் திருட்டுகள் தனிநபர் ஒருவராலா அல்லது திட்டமிட்டுச் செயற்படும் ஒரு கோஷ்டியாலா நடத்தப்படுகிறது என்பது புரியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (சி)

யாழ்ப்பாணம்

# கி.பி.9 ஆம் நூற்றாண்டு வட்டெழுத்து கல்வெட்டு தமிழகத்தில் கண்டுபிடிப்பு

(சென்னை)

தமிழ்நாடு - விழுப்புரம் மாவட்டத்தில் காணை என்னுமிடத்தில் தமிழ்நாடு தொன்மையியல் ஆய்வு நிறுவனத்தால் கண்டெடுக்கப்பட்டுள்ள ஆயிரத்துநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட செக்கு, வட்டெழுத்துக் கல்வெட்டுப்பற்றியதகவல்வெளியிடப்பட்டுள்ளது.

இங்கு காணப்பெறுவது புதுமையாக உள்ளது. ஏழ்பனை நாடு தான் யாழ்ப்பாணம் என்று மருவி வழங்கி வருவதாக ஒரு கருத்து உண்டு. இங்கு ஏழ்திசையாயிரத்தார் என்று குறிக்கப் பெறுவது யாழ்ப்பாண நகரைச் சார்ந்த திசையாயிரவர் என்பதைக் குறிப்பதாகக் கொள்ளலாம். அவ்வணிகர் கனயம் என்னும் ஊரில் செக்கு அமைத்திருக்கின்றனர். கனயம் என்பது தான் தற்போது காணை என்று மருவி அழைக்கப்படுகிறதோ என்ற ஐயம் எழுகிறது என்று மேற்படி கி. பி. 9 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுப்பற்றி ஆய்வாளர்கள் கருத்து வெளியிடுகின்றனர்,

98 செ. மீ. நீளமும் 75 செ. மீ. அகலமும் உள்ள கருங்கல் செக்கின் விளிம்பில் இக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. எனவும் தெரிவிக்கப்பட்டது. (சி)

"...திசையாயிரத்தைஞ் ஞற்றுவர் என்னும் வணிகர் குழு என்று கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஏழ்திசையாயிரத்தார் என்று குறிக்கப்பட்டு

## தென்னாபிரிக்காவில் குற்றச்செயல் ஒடுக்க தீவிர நடவடிக்கைகள்

(கேப்டவுன்)

தென்னாபிரிக்காவில் மலிந்து காணப்படும் குற்றச்செயல்களை, கட்டுப்படுத்தும் தீவிர நடவடிக்கைகளில் அந்நாட்டரசு இறங்கியுள்ளதென அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வகையில் கடந்த 3 நாட்களில் மட்டும் 1900க்கும் அதிகமான குற்றச்செயல் புரிவோர் என இனம் காணப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாட்டில் மிகப்பெரும் அளவில் நடைபெறும் குற்றங்களைத் தடுக்க தேசிய அளவில் எடுக்கப்படும் நடவடிக்கை இதுவெனவும்,

இக்கைது அதிரடி நடவடிக்கை இன்னும் 3 வருடங்கள் தொடரும் எனவும் தென்னாபிரிக்காவின் பாதுகாப்பு அமைச்சுத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதேசமயம்,

உலகில் கொலை, கொள்ளை நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்படும் நாடுகள் பட்டியலில் முன்னணி வகிக்கும் இந்நாட்டில், அமெரிக்காவில் இருப்பதை விட, 9 மடங்கு குற்றச் செயல்கள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (சி-உ)

## மரஉச்சியில் பிறந்த குழந்தைக்கு அடித்தது பேரதிஷ்டம்;ராஜ கௌரவம்

(லண்டன்)

மரத்தின் உச்சியில் பிறந்த குழந்தைக்கு அடித்தது பேரதிஷ்டம்.

மொஸாம்பிக் நாட்டின் கடுமையான வெள்ளத்தில் சிக்கி மரத்தின் உச்சியில் அமர்ந்திருந்த தாய்க்குப் பிறந்த குழந்தைக்கு அரச மரியாதை கிடைத்துள்ளது.

கடும் வெள்ளத்தின் காரணமாக சோஃபியா என்ற இத்தாயார் தனது குடும்பத்துடன் மரத்தின் உச்சியில் தங்கியிருந்தார். அப்போது அவருக்கு பிரசவவலி ஏற்பட்டது. சுகப் பிரசவம் நடந்தது. தகவலறிந்த தென்னாபிரிக்க மீட்புப் படையினர் ஹெலிகொப்டரில் சென்று குழந்தையையும், தாயையும் மீட்டனர்.

தற்போது அகதிகள் முகாமில் தங்கியுள்ள குழந்தையையும், தாயையும் அந்நாட்டின் அதிபர் ஜாக்யம் சிரானோ சென்று பார்த்தார். குழந்தைக்கு ரேஜிதா என அவர் பெயரிட்டார். இக்குழந்தையின் படிப்புச் செலவை அரசு ஏற்கும் என்று கூறிய அதிபர்.

சோஃபியாவின் குடும்பத்துக்கு அரசு செலவில் வீடும் கட்டித்தரப்படும் என்றும் சொன்னார்.

மொஸாம்பிய நாட்டுப் பெண்களுக்கே உரிய மன தைரியத்துக்கு சோஃபியா உதாரணம் என்றார் அவர்.

இவ் வெள்ளம் மொத்தம் 600 பேரைப் பலி கொண்டது. (சி)

## நீளாத்துயில் கொண்ட 'கனவுக்கன்னி' காதலர்க்குக் கொடுத்துள்ள கலக்கம்

[பொன்பென்]

கம்போடியக் கிராமம் ஒன்றின் கனவுக் கன்னியாகத் திகழ்ந்த (28-வயது) இளம் பெண் ஒருவர் தனக்கு எய்ட்ஸ் நோயிருப்பது தெரிய வந்ததும் தற்கொலை புரிந்துகொண்டார்.

அதற்கு முன் அவர் தனது தலையணைக்குக் கீழ் தனது 37 காதலர்களின் பெயர்களைப் பட்டியல் போட்டு வைத்துச் சென்றுள்ளார்.

கலக்கமுற்ற பிரஸ்தாப காதலர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பரிசோதனை செய்து கொண்டதில் அவர்களுக்கு எய்ட்ஸ் இருப்பது தெரிய வந்தது. ஏனையோர் மருத்துவப் பரிசோதனைக்குத் தயங்குகின்றனராம்.

கம்போடியாவில் சுமார் 2 இலட்சம் எய்ட்ஸ் நோயாளிகள் இருப்பதாக அந்நாட்டு சுகாதாரத்துறை மதிப்பிட்டுள்ளது.

நிரந்தர தூக்கமடைந்த தம் காதலி இப்போது தங்கள் தூக்கத்தைக் கெடுத்து விட்டாளே என்று முன் குறிப்பிட்ட இளம் பெண்ணின் காதலர்கள் புலம்புகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட இந்திய மாணவன் மீட்கப்பட்டார்

(மாஸ்கோ)

கடந்த ஈராண்டுகளுக்கு முன், ரஷ்யாவில் கடத்தப்பட்ட இந்திய மாணவனை ரஷ்ய இராணுவத்தினர் தமது அதிரடி நடவடிக்கை மூலம் பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

ஒரிஸா மாநிலத்தைச் சேர்ந்த சத்தியநாராயணன் ரகுநாத் மிஸ்ராப், மருத்துவ மேற்படிப்பினை; 1995 முதல் தெகிஸ்தான் தலைநகரில் மேற்கொண்டு வந்தார்.

அவ்வேளையில், 1998 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் செச்சினிய தீவிரவாதிகளின் முக்கிய கொமாண்டர் ஒருவரால் இம் மாணவன் கடத்தப்பட்டான்.

கடத்திய தீவிரவாதிகள் மாணவனின் விடுதலைக்கு 10 இலட்சம் டாலர் பேரம் பேசியிருந்தனர்.

இதற்கு மாணவனின் பெற்றோரும், இந்திய தூதரகமும் இணக்கம் தெரிவிக்காததையடுத்து. தெற்கு செச்சினியாவின் மலைப்பகுதி ஒன்றுக்குக் கடத்திச்சென்று அடிமைபோல தீவிரவாதிகள் நடத்திவந்தனர்.

இது குறித்து ரஷ்யப் படையினர்க்குக் கிடைத்த தகவல்களையடுத்து, மீட்கும் முயற்சிகள் — மேற்கொள்ளப்பட்டன.

ரஷ்யப் படையினரின் நடவடிக்கை வெற்றி பெற்றதையடுத்து மீட்கப்பட்ட மாணவன் - ரஷ்யாவில் உள்ள இந்திய தூதரகத்தில் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. (சி-உ)

# உலக தரிசனம்

## திருமண வீட்டில் மனநோயாளி புரிந்த வெறியாட்டம்; 36 பேர் பலியாகினர்

மனைவியைப் பிரிந்ததில் மன நிலை பாதிப்புற்றவர், திருமண நிகழ்வில் தற்கொலையாளியாகப் புகுந்து அங்கிருந்தவர்களை மரணிக்கச் செய்ததுடன் தானும் உடல் சிதறிப் பலியானார்.

வட. சீனாவிலுள்ள சாஜகான் கிராமத்தில் நடைபெற்ற இச்சம்பவத்தில் திருமண நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் 36 பேர் அநியாயமாய் மாண்டனர்.

நிலக்கரிச் சுரங்கத்தில் வெடிகுண்டு நிபுணராகப் பணியாற்றிய மேற்படி 34 வயதுடைய நபரைவிட்டு ஒரு வருடம் முன்பு மனைவியும் பிள்ளைகளும் பிரிந்து சென்றதில் இருந்து இவர் பித்துப் பிடித்த நிலையில் தான் தோன்றித்தனமாய் அலைந்து வந்தார் எனக் கூறப்படுகிறது. (சி-உ)

## சீனாவில் பஸ் விபத்து

(டோக்கியோ)

சீனாவின் தென்மேற்குப் பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தொன்றில் 25 பேர் மரணமடைந்துள்ளனர்.

இவர்களில் 18 பேர் அந்தவிடத்திலேயே பலியாகினர் காயமடைந்த 23 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (உ)

## செய்திக் குவியல்

அஸ்ஸாம் மாநிலத்தில் 43 அல்பா தீவிர வாதிகள் நேற்று சரணடைந்தனர் என்று சொல்லப்படுகிறது.

தென்னாபிரிக்காவில் கடந்த மூன்று தினங்களில் 1900க்கு மேற்பட்டோர் குற்றச் செயல்களுக்காகக் கைதாகியிருக்கின்றனர், இது நாட்டில் பெருமளவில் நடக்கும் குற்றங்களைத்தடுக்க அரசு எடுக்கும் முயற்சியெனக் கருதப்படுகிறது.

பங்களாதேசிற்கும் இந்தியாவிற்கு மிடையில் மீண்டும் விமானப் போக்குவரத்து ஆரம்பமாவதற்கான பேச்சுகள் நடைபெறுகின்றன.

புதுவை மந்திரிசபையில் இன்னும் நான்கு மந்திரிகள் சேர்த்துக் கொள்ளப்பட இருக்கின்றனர் சோனியா காந்தியின் ஆலோசனையுடன் அவர்கள் நியமிக்கப்படுவர்.

முன்னாள் இந்தோனேசிய ஜனாதிபதி சுஹாடோ மீது சுமத்தப்பட்ட வழக்குகளுக்கு நீதி மன்றத்துக்குப் அவர் போகத் தேவையில்லை எனச் செல்லப்படுகிறது.

ஐ.நா. பாதுகாப்பு சபையில் ஜப்பானும் ஜேர்மனும் நிரந்தர உறுப்பினராக ஆவதற்குத்தான் ஆதரவு வழங்க விருப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. (து)

## விசாரணைகள் மேற்கொள்ள ஐ.நா உயர் ஆணையர் ரஷ்யா விஜயம்

(லண்டன்)

மனித உரிமைகளுக்கான ஐக்கியநாடுகள் சபையின் உயர் ஆணையர் மேரி றொபின்ஸன் மொஸ்கோபயணமாகியுள்ளார்.

ரஷ்யப்படைகளால் செச்சினியாவில் மேற்கொளளப்பட்ட சித்திரவதை, பெண்கள் துஷ்பிரயோகம் மரண தண்டனை போன்ற குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளும் வகையிலேயே இவ்ரது பயணம் அமைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்தும் ரஷ்ய அரசு மறுத்து வருகின்றபோதிலும்,ரஷ்ய அமைச்சர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின்,நேரடி நிலைமைகளை ஆராயவென செச்சினியாவுக்குச் செல்லவுள்ளார்.

அங்கு காவல் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் செச்சினியப் போராளிகள், மற்றும் ஆதரவாளர்களைப் பார்வையிடுவார் எனவும் தெரியவருகிறது.

இதேசமயம்,

மேரி றொபின்ஸனின் முயற்சி கடினமானது என்றும் ரஷ்ய ஆட்சியாளர்கள் மனித உரிமை மீறல்கள் குறித்தும் அந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்தும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமெனவும் மொஸ்கோ வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (சி-உ)

## பாம்புக் கடத்தல் முறியடிப்பு மோப்பநாய் காட்டிக் கொடுத்தது

(பாரிஸ்)

அரிதாகிவரும் ஒருவகை பாம்பை உள்ளாடையில் கடத்திய பிரான்ஸ்நாட்டைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் பாரிஸ் விமானநிலையத்தில் பிடிபட்டார்.

கொலம்பியாவின் பகோடாவிலிருந்துவந்த விமானத்தின் மூலம் பாரிஸ்வந்தார்.

சந்தேகத்தின்பேரில் அவரை அங்கு அதிகாரிகள் சோதனை செய்தபோது அவர் உள்ளாடையில் பாம்புகடத்திவந்தது தெரியவந்தது.

வழக்கத்துக்குமாறாக அவரை அதிகமான நேரம் மோப்பநாய்சுற்றிச்சுற்றிவந்ததாலேயே அவர்மீது அதிகாரிகளுக்கு சந்தேகம் எழுந்தது.

பாம்புகள் சேகரிக்கும்பழக்கமுள்ளதால் தனதுசேகரிப்புக்காக அப்பாம்பைக் கடத்தியதாக அப்பயணி கூறினார்.

இப்பாம்பு சுமார் ஒரு அடி நீளமானது என்று தெரிவிக்கப்பட்டது. (சி)

## அமெரிக்கப் பிரஜைக்கு மிரட்டல் பாகிஸ்தான் மந்திரிகளுக்குப் பாதுகாப்பு

(கராச்சி)

பாகிஸ்தான் கராச்சிப்பகுயில் வாழும் அமெரிக்க பிரஜை ஒருவர் 6ஆம்திகதிக்குள்கடத்தப்படப்போவதாக மிரட்டல்கள் வந்துள்ளன.

இது ஊர்ஜிதமற்ற செய்திகள் என்றும் கருதப்பட்ட போதும். பாகிஸ்தானில் வாழும் அமெரிக்கர்களைப் பாதுகாப்புடன் இருக்கும்படியும் வெளியிட நடமாட்டத்தைக் குறைக்கும் படியும் அமெரிக்கத்தூதரகம் அறிவித்துள்ளது.

இதேவேளை பாகிஸ்தான் அரசாங்கம் மந்திரி சபை உறுப்பினர்களுக்கு தகுந்த பாதுகாப்புடன் இருக்கும்படி அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாகச் செய்கதிள் தெரிவிக்கின்றன. (து)

# சத்திர சிகிச்சை மருந்திற்கு மந்திகையில் தட்டுப்பாடாம்

மந்திகை அரசினர் மருத்துவ மனையில் சத்திர சிகிச்சைக்கு பாவிக்கும் மருந்திற்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தற்போது வடமராட்சி கிழக்குப்பகுதி, மற்றும் பளைப்பகுதியில் இடம்பெறும் தாக்குதலில் சிக்கி காயமடையும் பொதுமக்களுக்குச் சிகிச்சை அளிக்க முடியாதுள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதனால் சிகிச்சை மேற்கொள்வதற்காக யாழ்·போதனா வைத்தியசாலைக்கே நோயாளர்களை அனுப்ப வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேலை இரத்த அழுத்தத்திற்குப் பயன்படுத்தப் படும் அல்ரோமெற்ஸ், நிப்பிடிப்பின் ஆகியமருந்து வகைகளுக்கும் பலத்த தட்டுப்பாடு நிலவுகிறதாகவும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

(க-23)

யாழ். குடாநாட்டில்

# சம்பள அதிகரிப்பின்றி அவதியுறும் 5 ஆயிரம் கூட்டுறவு ஊழியர்கள்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் சுமார் 5 ஆயிரம் கூட்டுறவு ஊழியர்களுக்கு வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கூட்டுறவு ஊழியர் சேவை ஆணைக்குழுவினால் சிபார்சு செய்யப்பட்ட சம்பள அதிகரிப்பு இதுவரையும் சங்கங்களால் வழங்கப்படவில்லை.

இச்சம்பள அதிகரிப்பு ஜனவரி 1 முதல் வழங்கப்படல் வேண்டும் என சிபார்சு செய்யப்பட்டிருக்கின்ற போதிலும் எந்தவொரு கூட்டுறவுச் சங்கமும் சம்பள அதிகரிப்பை வழங்க வில்லை எனத் தெரிய வருகின்றது.

இச்சம்பள அதிகரிப்பு வழங்குவது தொடர்பாக வடக்கு கிழக்கு மாகாண சபையின் கூட்டுறவு ஆணையாளரான திருமதி. கமலா சிவசிதம்பரம் சகல கூட்டுறவு சங்கங்களுக்கு அண்மையில் சுற்றறிக்கை ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

குடா நாட்டில் தற்போது 23 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் 17 பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் சமாசம் கூட்டுறவுச்சாலை மற்றும் கூட்டுறவுக் கொத்தணிகள் என மொத்தம் 55 அமைப்புகள் வரை செயல்பட்டு வருகின்றன.

மேலும் இக்கூட்டுறவு அமைப்புகளில் பெரும்பான்மையானவை தொடர்ந்தும் நட்டத்திலேயே இயங்கி வருவதால் குறித்த சம்பள அதிகரிப்பை ஊழியர்களுக்கு வழங்குகின்றநிதிநிலைமைகள் உருவாகவில்லை எனவும் அறியப்படுகின்றது.

கூட்டுறவு ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு சில கூட்டுறவுச் சங்கங்கள் நடவடிக்கைகள் எடுத்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

மேலும் இவ் விடயம் பற்றி யாழ் மாவட்ட கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம் விரைவில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பது பற்றி தொழிற்சங்க வட்டாரங்கள் மூலம் அறியப்படுகின்றது.

(க-77)

# துன்பத்தின் மத்தியில் முகிழ்த்த ஒரு சிறு குறிஞ்சிப் பூ

## நூல் அறிமுகம்

போர் மேகங்கள் கவிந்த, உற்றார் உறவுகளை பிரிந்த அமைதியற்ற சூழல் எனினும் ஆய்காங்கு நன்முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன என்பதற்கு எடுத்துக்காட்டாக புகழ்பூத்த நீர்வேலி' நூல் வெளியீட்டைக் கருத முடிகிறது.

வரலாற்று திரிபுகளும் திணிப்புகளும் ஆசிரியரின் சொந்த மனோவிருப்புகளும் தாராளமாக இடம்பெறுகின்ற இக்கால கட்டத்தில் அறிவியல் ஆய்விற்குகட்டியம் கூறுமாப்போல் அமைந்த இந்நூல் மிகச்சிறப்பான பல உண்மைகள் தாங்கியவாறு வெளிவந்துள்ளது பாராட்டத்தக்கது.

கிராமத்தின் மூலதெய்வங்களாக போற்றப்படும் விநாயகர், முருகன் ஆகிய தெய்வங்களின் அழகு மிருதோற்றங்கள் கிராமத்திற்கே உரிய பயன்மிகு பயிரான வாழை மரங்கள் அழகுறகாட்சியளிக்க கத்தி, வண்டில் சில்லு பட்டைபோன்ற விவசாய, கைத் தொழில் உபகரணங்களின் அழகுமிளிரும்வடிவங்கள் நூலின் அட்டைப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை கண்டோர் கண்ணையும் கருத்தையும் ஈர்ப்பனவாக விளங்குகின்றன.

இந்துமதக் குருக்கள்மாரின் அருளாசி உரைகள், அறிஞர் பெருமக்களின் வாழ்த்துரைகளுடன் ஆக்கப்பட்டுள்ள இந்நூலானது நீர்வேலி என்னும் பெயருக்குரிய விளக்கம், இக்கிராமத்தின் அழைவிடச் சிறப்பு என்பவற்றை வரலாற்றை வரலாற்றியல் ரீதியிலும் புவியியல் சார்ந்த ரீதியிலும் விளக்கப்பட்டிருப்பது நயங் கொள்ளத்தக்கது.

இலக்கிய ரீதியாகவும் ஊரின் பெயரிற்கு விளக்கம் காணமுற்பட்டிருக்கும் ஆசிரியரின் முயற்சி போற்றத்தக்கதாகும்.

வலிகாமம் கிழக்குப்பகுதியில் பல பாகங்களிலுமிருந்து பாய்ந்து வருகின்றமழைநீரை தன்னுள்ளடக்கி அதனை தனக்கு நீர்நிலையானவேலியாகக் கொண்டதால் நீர்வேலி என்ற பெயரைக் கொண்டதே இக்கிராமம் எனச்சிறப்பிக்கப்பட்டமை நயத்திற்குரியது.

கிராமத்தின் மண்ணின் தன்மைகள், கிராம எல்லைகள், வீதி, ஒழுங்கைகள், என்பவற்றின் குறியீட்டுப் பெயர்கள், கிராமத்தின் பல்வேறு இடங்களிலும் அருளாட்சி புரியும் ஆலயங்களின் சிறப்பு, அவற்றின் வரலாற்று, தொடர்புகள், கர்ணபரம்பரைக்கதைகள் போன்ற மிகஎளிமையாக விளங்கப்படுத்தப்பட்டுள்ளன.

ஆற்றொழுக்கு போன்ற நடையில் இலகுவாக விடயங்களை நகர்த்திச் செல்லும் பாங்கு சிலாகிக்கத்தக்கது.

கிராமத்தின் அறிவுக்கருவூலங்களாகத்திகழும் பாடசாலைகளின்தோற்றம், வளர்ச்சி நிர்வாகிகள், கற்பித்த அதிபர்கள், ஆசிரியர்கள் பாட பற்றியகுறிப்புகள் சாலை ரீதியாக தொகுத்து தரப்பட்ட பாங்கு சிறப்புடையது.

கிராமத்தின் முக்கிய துறையான விவசாய செய்கை மற்றும் கைத்தொழில் சிறப்பு அதற்குப் பங்காற்றிய காமாட்சி அம்பாள் கைத்தொழிற்சாலை மற்றும் சிறு கைத்தொழில் நிலையங்கள் பற்றிய விபரங்கள் சிறப்பாக இந்நூலில் அமைந்துள்ளன.

கிராமங்களிற்கேஉரிய வசந்தன் அடி நாட்டுக்கூத்து போன்றன இங்கு காலாதிகாலமாக நடத்தப்பட்டு வந்ததையும் நோய்நொடிகள் நீங்கி மக்கள் சந்தோஷமாக வாழவேண்டும் என்ற அடிப்படையில்இவை ஆலயங்களில் ஆரங்கேற்றப்பட்டமை பற்றியும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நூல் நிலையங்களின்விபரங்கள பொது அமைப்புக்கள் முன்பள்ளி பாடசாலைகள் போன்றவற்றின் விபரங்களும் தெளிவாகத்தொகுத்துத்தரப்பட்டுள்ளன.

இக்கிராமத்தில் வாழ்ந்து மறைந்த அறிஞர் பெருமக்களான சிவசங்கரபண்டிதர், முதல்பண்டிதர், துரைசிங்கம் சிற்சபேசன்போன்ற அறிஞர்களின்விபரங்கள் அவர்கள் வாழ்ந்த காலப்பகுதி அவர்கள் யாத்த நூல்கள் பற்றியும் சிறப்பாக இந்நூலில் இடம்பெற்றிருப்பதுநூலுக்கு மேலும் மெருகூட்டுகிறது என்றே கருத முடிகிறது. நூலின் விலை சற்றுக் கூடுதலாகக்காணப்படினும் கூட பயனுள்ள பல விடயங்களை உள்ளடக்கியுள்ள இந்நூலானது போற்றி பாதுகாக்கப்படவேண்டிய ஒரு பொக்கிஷம் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

இந்நூலை வழிகாட்டியாகக் கொண்டு மேலும் பல ஆய்வு நூல்கள் வெளிவர வேண்டும். அறிவியல்தாகம் உள்ள ஆர்வலர்கள் பலர் இக்கைங்கரியத்தில் ஈடுபட வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

-கணேஸ்

நூல்: புகழ்பூத்த நீர்வேலி
ஆசிரியர்; ந. பரராசசிங்கம்
[சமாதான நீதிபதி]

# திருமணமாகி இரண்டே மாதங்கள் மனைவியைக்கொன்றுகணவன்தற்கொலை

[அளுத்கம]

திருமணமாகி இரண்டே மாதங்களில் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் கணவர் ஒருவர் மனைவியைக் கத்தியால் குத்திக்கொன்றுவிட்டு நஞ்சருந்தி தானும் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் ஒன்று அளுத்கம பொலிஸ் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

அனுஷாநிஷாந்தி (வயது 19) என்ற தன் மனைவியை கணவரான நீல் சந்தன (20 வயது) மனைவி பணிபுரியும் கூடைத்தொழிற்சாலைக்குச் சென்று பொய் கூறி வெளியே அழைத்து வந்து வீதியில் வைத்துக் குத்திக் கொன்றார் எனத் தெரிவிக்கப்பட்டது. [சி]

## பிரிவுபசார விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறையில் ஆத்தியடியில் உள்ள அரசமத்திய மருத்துவமனையில் கடந்த 12 வருடமாக வைத்திய அதிகாரியாக சேவையாற்றி இளைப்பாறியுள்ள செ. முத்துகுமாரசாமிக்கு நேற்று பிற்பகல் 3. மணிக்கு போரூட் மண்டபத்தில் பிரிவுபசார விழா நடைபெற்றது.

பருத்தித்துறை ஆதார வைத்திய நோயாளர் நலன் புரிச்சங்கத் தலைவர் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற விழாவில் முதன்மை விருந்தினராக சுகாதார சேவைகள் மாகாணப்பிரதிப்பணிப்பாளர் டாக்டர் உமா சிவபாதசுந்தரம் உட்பட பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர்.

(க-11)

## அரசஅதிபர் வேண்டுகோள்

குமணக் கப்பல் மூலம், பொருட்களை தென்பகுதிக்கு ஏற்றுவதற்கு விண்ணப்பித்த அனைவரையும், இன்று காலை 9.00 மணிக்கு. யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதிக்கு தவறாது சமூகமளிக்கும்படி யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கேட்ள்ளார்.

தற்போது பருத்தித்துறை துறைமுகத்தில் பொருட்களை இறக்கிக்கொண்டிக்கும் குமணக்கப்பலில் நாளை மறுதினம், 5 ஆம் திகதி முதல் பொருட்களை ஏற்றக்கூடியதாக இருப்பதனால் அது தொடர்பான கலந்துரையாடல்களுக்காகவே இவர்கள் அழைக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(க-உ)


புத்தாண்டுக்கான மலிவு விற்பனை

விஷேட தள்ளுபடியுடனான விற்றுத் தீர்த்தல்.

இல. 06 கஸ்தூரியார் வீதியில்

அமைந்துள்ள எமது மலிவு விற்பனை நிலையத்தில்
விஷேட தள்ளுபடியுடன் சகல பொருட்களையும்
பெற்றுக் கொள்ள முந்திக் கொள்ளுங்கள்.

மோகனம் ரெக்ரைல்ஸ்

இல. 06 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நிரந்தர முகவரி
இல. 41 நவீன சந்தை,
(உட்புறம்) யாழ்ப்பாணம்.

(கி/155)



மிகக் குறைந்த கட்டணம்,
தரமான சேவை

வலம்புரியில் எந்நேரமும் நீங்கள்
விளம்பரம் செய்ய இன்றே
தொடர்பு கொள்ளுங்கள்

வலம்புரியின் விளம்பர முகவர்

சிற்றிரெலிக்கொம் அன்ட்
கொம்பியூட்டர் 'சேவை

இல: 11, பரமேஸ்வராச் சந்தி
திருநெல்வேலி

யாழ்ப்பாணம்

நிலத்தில் கிடந்தமை
கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்
வாய்ச்சொல் -
- குறள்

# வலம்புரி

## பொது நலம் பேணி -

நிகழ்கால அனர்த்தங்கள் மக்களைச் சுட்டெரிக்கின்றன. ஒரு நாள் உணவை ஒழியென்றால் ஒழியாத வயிறு மக்களைப்படுத்தும் துன்பம் தெரிந்ததொன்றே. இதனைப்புரிந்துகொண்ட ஒளவை ''இடும்பைகூர் என் வயிறே உன்னோடு வாழ்தலரிது'' என்றார். வறுமைப்பிடியில் சிக்கிப் பரிதவிக்கும் மக்களைப் புரியாத வர்த்தகர்கள் நாட்டில் இருக்கக் கூடாது. சுரண்டல் மேல் வழிகளாக மாட மாளிகை கட்டுவது தான் நோக்கமாக வாழக்கூடாது. இலாபநோக்கிலும் ஒருமையாக உணர்வு மலரத் தான்வேண்டும்.-

பாவனையாளர் சங்கம் மக்கள் நலன் காப்பதற்கு இயங்கி வருவதாகும். அதன் கோரிக்கையை வர்த்தகர்கள் இணங்க மறுத்த சங்கதி ஒன்று அண்மையில் நடந்தேறியிருக்கிறது.

பாண் பாமர மக்களின் உணவு என்ற ஒரு பரிதாப நிலை உண்டு அந்த மக்களின் நலத்தைப் போக்க வேண்டும் என்ற நிலையில் அரச அதிபர் உள்ளிட்ட சங்க அங்கத்தவர்கள், வர்த்தகர்கள், கூடி 450 கிறாம்பாணின் விலையை நிர்ணயிக்கத் தலைப்பட்டனர். வர்த்தக இலாபம் நோக்கி செய்யப்படும் தொழில் என்பதை மறுப்பதற்கில்லை. கொள்ளை இலாபம் அடித்து ஏழைகளைக் கொடுமைப்படுத்தக் கூடாதென்பதேபாவனையாளர் சங்கத்தின் கோரிக்கை.

பாண் மூன்று வேளை உணவாகவும் பல குடும்பங்களில் கொள்ளப்படும் பொல்லாத காலம் இது அதனை 9 ரூபாவுக்கு விற்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்தது விறகு போன்ற பொருள்களின் விலை ஏற்றத்தால் நட்டமுறைப்படுத்த முடியாதென அடம்பிடித்து 11 ரூபாவுக்கே கொடுக்கலாம் என்கின்றனர். இதேவேளை கூட்டுறவுச் சங்கத்தினர் 10 ரூபாவுக்குக் கொடுக்கலாம் எனஒப்புக் கொண்டனர். இங்கு ஒன்றை நினைவு கூரவேண்டும். 350 கிராம் அதனிலும் குறைவாகவும் கடந்த காலங்களில் போட்டு விற்பனை செய்தவர்கள் புதிய அச்சில் 450கிறாம் தரப்போவது சாத்திய மில்லைதான்.

-அன்புடன் ஆசிரியர்

# பொருத்தமற்ற இடத்தில் அமைக்கப்பட்ட
# யாழ். இந்துக் கல்லூரியின் ஆடுகளம்

அதிபர் - ஆசிரியர்களின் கடும் எதிர்ப்பின் மத்தியில் ஆடுகளம் அமைக்கப்பட்டது. ஆடுகளத்தை இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் லிண்டா ஜோய்டபீல்ட் திறந்து வைத்தார்.

அன்றைய தினம் மாலை அங்கு கூடைப் பந்தாட்டம் நடைபெற்றது. அதனைப் பார்வையிடுவதற்காக இந்துக் கல்லூரியில் கடந்த 25 வருடங்கள் ஆசிரிய சேவையாற்றிய திரு. புண்ணியலிங்கம் அவர்கள் வந்தார். தனது மோட்டார் சைக்கிளை வழமைபோல் குமாரசாமி மண்டபத்திற் கருகில் நிறுத்துவதற்காக உள்ளே செல்கின்றார்.

வாசலில் நீல நிறச் சட்டை அணிந்து நின்ற காவலாளி அவரைத் தடுத்து நிறுத்தி இங்கு மோட்டார் சைக்கிள் விட முடியாது எனக் கூறுகின்றார். கடந்த 25 வருடங்கள் ஆளுமையுடன்—நேர்மையுடன்—இறையுணர்வுடன் சேவையாற்றிய ஆசிரியர் புண்ணியலிங்கம் துணிவுடன் நான் வழமையாக விடும் குமாரசாமி மண்டபத்திற்கருகில் தான் விடுவேன். இதில் எந்த மாற்றமும் செய்ய மாட்டேன் என காவலாளிக்குப் பதிலளித்து விட்டு வழமையான இடத்தில் சைக்கிளை நிறுத்தி விட்டுச் சென்றார்.

பொருத்தமற்ற இடத்தில் ஆடுகளம் அமைக்கப்பட்டதன் பலனை, பழைய மாணவர் (கள்) என்ற உரிமையால் செய்யப்பட்ட தன்னாதிக்கத்தின் தாக்கத்தை கடந்த 25 வருடங்களாக எத்தனையோ மாணவர்களை உருவாக்கி விட்ட ஓர் ஆசிரியர் ஆடுகளம் திறந்து ஆறு மணித்தியாலங்களுக்குள் அனுபவித்தார். இவையெல்லாம் இனித் தொடரும் கதைதான்.

### விசுவாசமான அடிமைகள்

இந்துக் கல்லூரியின் ஆடுகளத்தைத்திறந்து வைத்தது யார்? அவருக்கும் இந்துக் கல்லூரிக்குமென்னதொடர்பு அவர் யாழ்ப்பாணம் வந்தது ஆடுகளம் திறக்கவா என்றெல்லாம் பொதுமக்கள் பெற்றோர் மத்தியில் கேள்வி எழுவது நியாயமானதே. அதற்குக் காரணமும் உண்டு.

இலங்கை பிரிட்டிஷாருடைய ஆட்சியில் இருந்த போது இந்து ஆலயங்கள் உடைத்து அழிக்கப்பட்டன. சிவ பூமியில் சைவத்திற்குப் புதைகுழி தோண்ட முற்பட்டவர்கள் அவர்கள் அதனை எதிர்த்து மரணித்தவர்கள் பலர். அவர்களின் நாசகாரச் செயலினால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல இந்து ஆலயங்கள் இருந்த இடமே தெரியாது ஒழிந்து போனது இவையாவும் சர்வ உண்மை.

## குருஷேத்திரம்

எனினும் ஆங்கிலேயர் தமது நிர்வாகத்தின் முக்கிய பதவிகளை தமிழர்களுக்கே வழங்கியிருந்தார்கள் ஏனெனில் அவர்களைப் போன்ற 'விசுவாசமான அடிமைகளை' வேறு எங்கும் தேடி எடுக்க முடியாது என ஆங்கிலேயர் கருதியதாக ஆராய வல்லவர்கள் கருத்துக் கூறியுள்ளனர்.

பிரிட்டிஷ் தூதுவர் யாழ். இந்துக்கல்லூரியின் ஆடுகளத்தைத் திறந்துவைத்ததன்மூலம் 'தமிழர் விசுவாசமான அடிமைகள்' என்பது மேலும் உறுதிப்படுத்தப் பட்டுவிட்டது

### தமிழ நிலைக்கு பிரிட்டிஷாரும காரணம்

இன்று நம்இனம் நாதியற்றுப்போவதற்கும், இளம்சமூகம் உயிர்த்தியாகம் செய்வதற்கும் பிரிட்டிஷ் ஆட்சி அடிப்படைக்காரணம் என்பதை நாம் மறுக்கமுடியாது. 1948 இல் இலங்கையின் ஆட்சியை பெரும்பான்மை இனத்திடம் பிரிட்டிஷார் கையளித்ததன் விளைவே இன்றுநாம் படும்கதிக்குக்காரணம். அந்நிலை தெரிந்தும் நாம் விடுவதாக இல்லை. அவர்களைக் கொண்டுவந்து திறந்துவைத்தால்தான் நமக்குப்பெருமைஎன்று எண்ணுகிறோம்.

அதுமட்டுமன்றி பிரிட்டிஷ் தூதுவரை 'அம்மையார்' என்றும் புகழ்ந்தோம். 'மதுவும்' 'மாமிசமும்' உண்ணாது மாதவம் செய்தோரை 'அம்மை' என்பதே இந்துத்தமிழர் பண்பாடு. ஆனால் இங்கு எப்படியெல்லாம் நடக்கிறது மின்னொளி தந்ததண்ணொளி என்றும் போற்றினோம்.

கண்ணொளி பறித்தபின்பு மின்னொளி எதற்கு? எத்தனை இளம்சந்ததியின் எதிர்காலம் அழிந்துவிட்டது. வதுவைசெய்து இளம்வயதில் கணவனைப் பறிகொடுத்து கட்டுண்ட வேலிக்குள் காலம்பூராகக் கண்ணீர் வடிக்கும் மங்கையின் வாழ்விற்கு விளக்கம்கேட்டு வழக்கு வைத்தால் பிரிட்டிஷாரும் குற்றக்கூண்டில் ஏற வேண்டியவர்கள்.

அப்படிநிலைஇருக்கும்போது தூதுவரைப் புகழ்ந்து, பூமாலைசாத்தி வழிபாடு செய்ததைத்தான் சுயநலம் மிக்கசிலர் வலதுகரமாக இருந்து புரிவெட்டிக்கொடுக்கிறார்கள் என்று சொல்வதா? சொன்னவர்கள் மட்டும் புரிந்துகொள்வார்கள்—

### யாழ்ப்பாண விஜயத்தின் நோக்கம் என்ன

நான்கு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு பிரிட்டிஷ் தூதுவர் யாழ்ப்பாணம் வந்தது ஏன்? யுத்தத்தின் கொடுமையால் நம் மண் பட்டுப் போன கோலத்தை- அவயம் இழந்தோரை அநாதையாய் போனோரை- குண்டுபட்டுக் குற்றுயிரான கட்டடத்தை இன்னும் சமாதான சூழ்நிலையைப் பார்க்கவே வந்தார்.

ஆனால் ஆடுகளம் திறந்து வைக்கப்பட்ட போது அருகிலிருந்தவரைப் பார்த்து யாழ்ப்பாணத்தில் எந்தப் பிரச்சினையும் இல்லை, மக்கள் சந்தோஷமாக வாழ்கிறார்கள். ஆடுகளம் இல்லாததே ''அவர்களுக்கு'' பிரச்சனையாக இருந்திருக்கும். அதுவும் இப்போது திறந்து வைக்கப்பட்டு விட்டது. என்று கூறியதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

### இந்துவின் ஆடுகளத்தைத் திறக்க ஓர் ''இந்து'' இல்லையா

அண்மையில் சென். ஜோன்ஸ் கல்லூரியில் புதிய கட்டடம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. அதற்கு அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்ணான்டோ அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார் இது அவர்கள் தாம் சார்ந்த சமயத்தின் பால் கொண்ட விசுவாசம் அதில் நியாயம் உண்டு மதவேறுபாடில்லை.

ஆனால் யாழ். இந்துக்கல்லூரியின் ஆடுகளத்தைத் திறந்து வைப்பதற்கு பெயருக்கேற்ற ஒருவர் கிடைக்கவில்லையா? என்று கல்லூரியில் உண்மையான விசுவாசம் கொண்டவர்கள் எழுப்பும் குரல் நம செவிகளில் விழவே செய்கிறது. அவர்கள் தரும் கருத்தும் நியாயமானதே.

### ★ விதுரன் ★

யாழ். இந்து தந்த மைந்தர்கள் உலகெங்கும் உயர்வு பெற்றிருக்கிறார்கள். இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருக்கும் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் சர்வதேசத்தாலும் மதிக்கப்படும் ஒருவர். யாழ் இந்துவின் மைந்தன், யாழ். பல்கலைக்கழகத்தை சமூகத்துடன் தொடர்புபடுத்தியவர்.

அடுத்து யாழ். மாவட்டத்தின் அரசாங்க அதிபராக இருந்து இக்கட்டான -பல்வகைச் சிக்கல் நிறைந்த சூழ்நிலையிலும், ஆரவாரமின்றி அடக்கத்துடன் நம் மக்களுக்கு அரும்பணியாற்றி வரும் திரு. க. சண்முகநாதன் அவர்களும் யாழ். இந்துவின் மைந்தனே.

இவர்கள் எல்லாம் இங்கிருக்க பிரிட்டிஷ் தூதுவர் யாழ். இந்துவின் ஆடுகளத்தைத் திறந்து வைத்தது ஏன் என்பதைபெற்றோர்கள், மாணவர்கள் பொது நலன் விரும்பிகள் சீர்தூக்கி ஆராய்வது இனிமேலாவது கல்லூரியை கைப்பற்றியிருக்கும் ஒரு சில கரங்களை உடைத்தெறிந்து பொதுவாக்க உதவும்.

தவறினும் குருஷேத்திரத்தில் ''வலம்புரி'' சங்கெடுத்து நாதம் ஊதி தர்மம் நிலை நாட்டிய கண்ணன் கட்டாயம் கேட்பான்.

# யாழ். அரச ஊழியர்களுக்கான கணனிப் பயிற்சி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள அரச ஊழியர்களுக்கு வடக்குக் கிழக்கு மாகாண சபையின் முகாமைத்துவ பயிற்சி நிறுவனத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும் கணனிப் பயிற்சி வகுப்புகள் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

72, பருத்தித்துறை வீதி, முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள டி. சி. எஸ் பயிற்சி நிலையத்தில் இவ்வகுப்புகள் ஆரம்பிக்கப்படும் எனவும், தெரிவு செய்யப்பட்டவர்களைத் தவறாது சமூகமளிக்குமாறும் கேட்கப் பட்டுள்ளது.

(ந)

### வடமராட்சி கிழக்கிலிருந்து

# இடம் பெயர்ந்தோர் பதிவின் பின்னரே செல்ல அனுமதியாம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து பருத்தித்துறை யாழ்ப்பாண பகுதிகளிற்கு செல்லும் மக்களை வல்லிபுரம் சோதனைச் சாவடியில் படையினர் பதிவு செய்தபின்னரே மேற்கொண்டு செல்ல அனுமதிக்கின்றனர்.

இந்தப் பதிவு வேலைகளை இலகுபடுத்தும் நோக்கில் இப்பகுதி கிராமசேவகர்கள் மக்களை ஒழுங்குபடுத்தி துரிதகதியில் வேலைகளைச் செய்ய உதவி வருகின்றனர்.

இதே வேளை வடமராட்சி பகுதியில் இடம் பெயர்ந்து தங்கியுள்ள மக்களை மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப. வேலாயுதம் பிள்ளை நேரடியாகச் சென்று பார்வையிட்டு வருகின்றார்.

(க-43)



## தவக்கால சிந்தனை

### 27 ஆம் நாள்

காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர் என்ற உயிருள்ள வார்த்தையோடு இன்றைய நாளை கொண்டு செல்வோம்.

மனித வாழ்க்கையில் நம்பிக்கை கொள்ள உறவு அவசியம். ஒருவரின் செயலைக் கொண்டே நாம் அவரில் நம்பிக்கை வைக்கிறோம். ஆனால் ஒருவரின் வார்த்தையில் கொள்ளும் நம்பிக்கையே மிகவும் உறுதியானதும் ஆழமானதும். இயேசு செய்யும் அற்புதங்கள் அறிகுறிகளைக் கண்டு அன்று அவரின் வார்த்தைகளை நம்பி எம் வாழ்வை கொண்டு செல்ல வேண்டும்.

உடல் ஒறுத்தலால் அன்றி மன ஒறுத்தலால் ஆன்மீகத்தை நல் வழிப்படுத்தும் இத் தவக்காலத்திலே இயேசுவின் உயிருள்ள வார்த்தையில் உறுதிகொண்டு சிந்தித்து செயல்படுவோம் புதிய விண்ணுலகையும் புதிய மண்ணுலகையும் எம் மத்தியில் உருவாக்குவோம்.

றொ. துவாரகா
உரும்பிராய்

# பளைப்பகுதியில் "வலசக்கர" இராணுவநடவடிக்கை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கண்டிவீதியில் விடுதலைப்புலிகள் ஊடறுத்து நிலை கொண்டுள்ள பகுதிகளை மீண்டும் கைப்பற்றும் நோக்கில் வலசக்கர என்னும் இராணுவ நடவடிக்கை படையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலையளவில் முகமாலைப் பகுதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கைபற்றிய எதுவித தகவலையும் படைத்தரப்பு இதுவரை வெளியிடவில்லை, இதேவேளை இந்த இராணுவ நடவடிக்கையைத் தாங்கள் முறியடித்து விட்டதாக புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது. (வ-ச)

# மூடப்படும் நிலையில் பளை வைத்தியசாலை

பளை மாவட்ட வைத்தியசாலையை மூடவேண்டிய நிலையேற்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வைத்தியசாலையில் மருந்துப் பொருட்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாலும் வைத்திய சாலைப் பகுதி யுத்த பிரதேசமாக காணப்படுவதால் வைத்தியர்கள் ஊழியர்கள் கடமைக்குவர அஞ்சுகிறார்கள் இதனாலேயே இவ்வைத்தியசாலையை மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

சர்வதேச தொண்டு நிறுவனங்கள் இவ்வைத்திய சாலைப் பகுதியை யுத்த சூனியப் பிரதேசமாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இவ்வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி செந்தில்நாதன் அம்பிகைபாலன் கோரிக்கை விடுத்துள்ளார். [வ-ச]

## முகமாலை . . .

களுக்கு முன் அவர்கள் அங்கிருந்து வெளியேறியமையால் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை முகமாலைப் பகுதிக் கடைகளில் இருந்து கடை உரிமையாளர்கள் பொருட்களை ஏற்றியதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. [வ-ச]

## 11 கைதிகளும் . . .

பெற்றோர் பாதுகாவலர் சங்கம் நேற்று மகாவலி கேந்திர நிலையத்தில் கூடித் தீர்மானித்துள்ளனர்.

சங்கத்தின் தலைவர் இ.பி. நாணயக்கார தலைமையில் நேற்று கொழும்பில் நடைபெற்ற கூட்டத்தில் புத்தாண்டு தினத்தன்று சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் சுமார் 500க்கு மேற்பட்ட காணாமல் போன படையினரின் பெற்றோர், உறவினர்கள் கலந்து கொண்டனர்.

யுத்தக் கைதிகளாக இருக்கும் 11 பேரினது விடுதலைக்கு அரசுக்கு அழுத்தம் கொடுப்பதென்றும் மே மாதத்திற்குள் யுத்தக் கைதிகள் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காது போனால் அரசின் அனுமதியின்றி வன்னிக்குச்செல்லவும் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

1998ல் விடுதலைப் புலிகளினால் விடுதலை செய்யப்பட்ட கப்டன் ஜனகதேநுவர கருத்துத்தெரிவிக்கையில் அரசாங்கத்தின் சிறைச்சாலையிலும் பார்க்க விடுதலைப் புலிகளின் சிறைச் சாலைகள் சகல வசதிகளுடன் இருப்பதாகவும், சிறையில் கைதிகளை நன்கு பராமரித்தனர் என்றும் தெரிவித்தார். [வ]

## 17 படை . . .

யினரும் காயமடைந்ததாகவும் 65படையினர் சிறுகாயங்களுக்குள்ளாகி பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் மேலும் தெரிவித்தது,

இதேவேளை இம்மோதலில் மேலும் 13புலிகளின் சடலங்களைத் தாம் கண்டெடுத்துள்ளதாகவும் இவற்றுடன் சேர்த்து 34 சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் இவற்றில் 22பெண்புலிகளுடையவை என்றும் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைச் செயலகம் மேலும் தெரிவித்துள்ளது,

## தென்மராட்சி . . .

வனங்களின் ஊழியர்கள் பாதைகள் தடைப்பட்டுஇருப்பதினாலும், மோதல்கள் நடைபெறுவதனாலும் குறிப்பிட்ட பகுதிகளுக்குச் செல்ல முடியாதுள்ளது.

முக்கியமாக பளைப்பகுதியில் இருந்து மேற்கொள்ளப்பட்டு புனருத்தாரண வேலைகள் யாவும் பூரணமாக ஸ்தம்பிதம் அடையலாம் என்று வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களில் இருந்து செய்திகள் தெரிவிக்கின்றன. [வ]

## அன்ரனோவ் '26' . . .

ஏ. ஆர் விஜயசுந்தர தெரிவித்தார்.

விமானம் விபத்துக்குள்ளாவதற்கு முன்னர் விமான செயற்பாடு தொடர்பாககடைசிநிமிடங்களை பதிவுசெய்த மற்றுமொரு கருவி விசாரணைக்காக உக்ரைனுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் இவ்விமான விபத்தில் கொல்லப்பட்ட ரஷ்சியர்களின் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இடம்பெயர்ந்தோர் . . .

மாவட்ட எம். பியும், ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமுமான டக்ளஸ்தேவானந்தா தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு மற்றும் தென்மராட்சிப் பகுதிகளில் நிலவும் யுத்தத்தால் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு நிவாரணத்தை உடனடியாக வழங்கும்படி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவையும் வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் கலாநிதி சரத்அமுனுகமவையும். டக்ளஸ் தேவானந்தா கேட்டதற்கிணங்கவே இவ் அனுமதி கிடைத்துள்ளதாகத் தெரியவருகிறது

இதேவேளை நளை முதல் இடம்பெயர்ந்தவர்களுக்கு சமையல்பாத்திரங்கள் தற்காலிக கொட்டகைக்கான பொருட்கள் போன்றவற்றை வழங்கக் கூடியதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச- 52)

# நெல்லியடியில் துப்பாக்கிச் சத்தம்

[நெல்லியடி]

நெல்லியடியில் நேற்று இரவு பன்னிரெண்டு மணியளவில் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டன இதன்மேலதிக விவரங்கள் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை. [ந-18]

# ★ இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்கு ஆயர்கள் செல்ல புதிய நடைமுறை அமுல்!

[கொழும்பு]

வன்னியில் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் உள்ள தேவாலயங்களுக்கு ஆயர்கள் செல்வதற்கு புதிய நடைமுறை ஒன்று அமுல் படுத்தப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கு ஆயர்கள் செல்வதற்கு புதிய நடைமுறையின் பிரகாரம் வன்னிக்குச் செல்லவிருக்கும் ஒவ்வொரு தடவையும் 'பாஸ்' எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப் புதிய நடைமுறை அறிமுகப் படுத்தப்படுமுன் இராணுவக்கட்டுப் பாடற்ற வன்னிக்குச் செல்வதற்கு ஒரு தட்வை 'பாஸ்' எடுத்தால் அத்தகைய 'பாஸ்' மூன்று மாதங்களுக்கு செல்லுபடியானதாக அமைந்திருந்தது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. [வ]

## பளைப்பகுதியில் . . .

படையினரின் வழமையான சோதனை நடைமுறைகளின் பின்பே மேற்படி பகுகளுக்கு வர அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

பளைப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வந்த உறவினர்களை சந்தித்து அழைத்து வரச்சென்ற மக்கள் குறிப்பிட்ட நேரத்தின் பின் மக்களை இப்பால் வெளியேற விடாது படையினர் மறித்ததால் ஏமாற்றத்துடன் திரும்பியதாக ஒருவர் வலம்புரிக்குத் தெரிவித்தார்.

இடம் பெயர்ந்து பாடசாலைகளிலும் தேவாலயங்களிலும் தங்கியுள்ள மக்களின் உணவு இருப்பிடவசதிகளை பளை உதவி அரசாங்க அதிபர் புத்திசிகாமணி தென்மராட்சி ஈ.பி.டி.பி. அமைப்பாளர் சாள்ஸ் ஆகியோர் சென்று பார்வையிட்டதுடன் அவர்களின்குறை நிறைகளையும் கேட்டறிந்து அவர்களுக்கு உலர் உணவு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

பளைப் பகுதியிலிருந்து மக்கள் வெளியேறுவதற்கு யாழ் மறை மாவட்ட வணபிதாக்களின் எடுத்து நடவடிக்கை காரணமாக அங்கு தங்கியுள்ள ஏனைய மக்களும் அப்பகுதியிலிருந்து இன்று வெளியேறிவரவரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (வ 52)

## கால . . .

கின்றன.

இதேவேளை மனித நேய அமைப்புக்கள் மக்கள் இடம் பெயர்வுக்கான காலஅவகாசத்தை மேலும் நீடிக்குமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளன. (வ-52)

## நோர்வே . . .

பயங்கர வாதத்திற்கு எதிரான அமைப்பு மற்றும் சிங்கள வீரவிதான அமைப்பு பூமி புத்திர கட்சி உட்பட பல சிங்கள பேரினவாத அமைப்புக்கள் இந்த ஆர்ப்பாட்ட பேரணியில் கலந்து கொள்ளவுள்ளன

சிங்கள பேரினவாத அமைப்புக்கள் முன்னரும் எதிர்ப்புத் தெரிவித்து இத்தகைய ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (வ)

# விசேட அதிரடிப்படையினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல்

(கல்முனை)

மட்டக்களப்பு அம்பாறை எல்லையில் கோணாங்கொல்ல என்ற இடத்தில் வைத்து விசேட அதிரடிப்படையினர்மீது விடுதலைப்புலிகள் நேற்றுக் காலை 6.45 மணியளவில் மேற்கொண்ட தாக்குதலில் அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார் கொல்லப்பட்டவரின் சடலத்தையும் புலிகள் எடுத்துச் சென்றுள்ளனர்.

இச்சடலத்தை ஐ. சி. ஆர் சி. மூலம் படையினரிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை இத்தாக்குதலில் 8விசேட அதிரடிப்படையினர் கொல்லப்பட்டதாக புலிகள் அறிவித்துள்ளனர்

## யானைக்கால் தடுப்பு மருந்து

# ஒத்துக் கொள்ளாத காரணத்தால் சில குழந்தைகள் ஆஸ்பத்திரியில்

(புத்தளம்)

புத்தளம் - தில்லையடிக் கிராமத்தில் கடந்த 29 ஆம் திகதி குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட யானைக்கால் நோய் தடுப்பு மருந்து பெற்ற 10 குழந்தைகள் மேற்படி தடுப்பு மருந்து அவர்களுக்கு ஒத்துக்கொள்ளாமையால் திடீர் சுகவீனமடைந்து புத்தளம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டன.

இது பற்றி மேற்படி ஆஸ்பத்திரியின் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. இராமச்சந்திரன் சில குழந்தைகளுக்கு இத் தடுப்பு மருந்துக் ஒத்துக் கொள்துளாது தான் எனினும் கிலேசமடைவதற்கு ஒன்றுமில்லை என்று தெரிவித்தார். (சி)

# ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் சிரமதானப் பணி நடைபெற்றது

[யாழ்ப்பாணம்]

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் சகல உப அலுவலக ஊழியர்களும் சேர்ந்து நேற்று ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையில் சிரமதானப் பணியினை மேற்கொண்டனர்.

சிரமதானப் பணியினைத் தொடர்ந்து ஊழியர்களுக்கு ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தலைவர் மதனராஜா சீருடை வழங்கினார்.

இத்தகைய சிரமதானப் பணிகள் ஒவ்வொரு மாதமும் முதல் வரும் ஞாயிற்றுக் கிழமைகளில் மேற்கொளவு தெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ந)

## பெற்றுக்கொள்ளவும்

நவாலி கிழக்கைச் சேர்ந்த பிரகாசம் இராசேந்திரம் சாவள்க்காடு ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கந்தசாமி குணலிங்கம் ஆகியோரின் தேசிய விசேட அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக்காரியாலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும். (ந)

# புங்குடுதீவில் விசாரணை

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவுப் பகுதியில் நேற்று முன்தினம் கடற்படையினரால் பிஸ்ரராலும், துப்பாக்கி ரவைகளும் மீட்கப்பட்டதாகத்தெரியவருகிறது.

இதனைத்தொடர்ந்து அப்பகுதிப் பொது மக்கள் கடற்படையினரால் கடும் விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகவும்சிலர் நையப்புடைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந)


## அலுவலகச் செய்தியாளர் (பயிலுநர்) பதவிக்கான வெற்றிடம்

ஆசிரியர் பீடத்தில் அலுவலகச் செய்தியாளராக(பயிலுநர்)கடமையாற்றுவதற்கு க.பொ.த. உயர் தரத்தில் சித்தியடைந்த ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மு.கு;- பத்திரிகைத்துறையில் ஆர்வமுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி,

பிரதம ஆசிரியர்
"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு.
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல, 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணத் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டுஏப்ரல் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.